தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஐப்பசி 7 (24-10-'59). சனிக்கிழமை | இதழ் 19

கட்டுப்பாட்டுடன் வாழ்வோம்!

கடந்த 17. 18-10-'59-ம் நாட்கள் சென்னை மாநகரின் வரலாற்றில் ஒரு புதிய காட்சியைத் திறந்து வைத்தன. ஆம்! ஆம்! மாண்ட மாமன்னர்களின் புகழை மீண்டும் தமிழ் மண்ணில் நிலை நிறுத்துவது ஒன்றே கடனாய்க்கொண்டோர் எண்ணிலராய் எழுந்துவிட்டனர், இங்கு. "வெல்லும் மரபீது; பகை கொல்லும் படையிது!" என ஆர்த்தெழுந்து போர்ப்பாட்டுப் பாடும் சீர் மறவர் திரண்டுவிட்டனர், இங்கு.

"கிளம்பும் வேலொலியே, எம் உளம் வேட்கும் யாழொலி! கிழியும் பகையுடலே, எம் விழி நத்தும் எழிற்காட்சி!" என்றெழுந்து, வேலெறிந்து பகையின் வேரழித்து வென்ற தமிழ்க் குலத்தார் மறுமலர்ச்சி பெற்றுவிட்டனர், இங்கு.

அந்த உணர்ச்சி மிகு காட்சியை சென்னை நகரம் மறுபடியும் எடுத்துக் காட்டியது, கடந்த 17, 18-ம் நாட்களில். தங்கத் திராவிடத்தைக் காக்கத் துடிக்கும் சிங்க மறவர் அணியணியாய் எழுந்து நின்றனர்.

அண்ணாவின் ஆணை எது என்று கேட்டனர். அந்த இரு நாட்களும் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது மாநாடு என்பதை அறிவிப்பதில் ஆடவரும் பெண்டிரும் காட்டிய மகிழ்ச்சி அளவிறந்தது.

உலகின் முதல் தாய் மொழியாய் தமிழ் வாழ்ந்தபோது, தமிழர் தம்மிடையே மூன்று தலைநகரங்களைக் கண்டனர். சோற்றுக்குப் பெயர் போன சோழ நாடும், வீரத்திற்குப் புகழ்பெற்ற வஞ்சி மண்ணும், மொழியைப் போற்றிக் காத்து வாழ்வுக்கு ஒளி தந்த பாண்டியன் மூதூர் மாடமா மதுரையும் அன்று தலை நகரங்களாகத் திகழ்ந்தன. ஆனால் அவற்றுள் மதுரை ஒன்றுதான் இன்றும் நிலை நிற்பது. எனினும் அதன் புகழ் இன்று மொழியளவில் இல்லை. வேறு தொழில் பெருக்கத்தில்தான் இருக்கிறது. சோழன் தலை நகர்கள் இருளுக்கூடே புதையுண்டுவிட்டன. வஞ்சி இன்று உருமாறிவிட்டது.

ஆனால் இந்தத் தலை நகரங்கள் எல்லாவற்றையும்விட ஓங்கிய புகழுடன் நிலை நிற்பது, சென்னை மாநகர். "வேறெதுவும் இதற்கு அடிப்படையில்லை. வளர்ந்து வரும் தொழில்களும், பெருகி வரும் மக்கள் தொகையும், நான்கு திக்கினரும் கூடும்படியாக அமைந்த இட அமைப்பும், ஆங்கிலேயர் ஆண்ட ஆட்சியும்தாம் இத்தனை பெருமைகளைக் கூட்டி வைத்தன, சென்னை நகருக்கு!" என்பார் சிலர். "அன்னார் உண்மை உணராதார்! இன்று

— 12-ம் பக்கம் —

தொல்காப்பியச்சுவை!

16. செய்யுளியலின் சிறப்பு.

இராம. இராமநாதன்
பி.ஏ. (ஆனர்சு)

தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நாட்டில் வழங்கி வந்த பாக்கள் நான்கு வகைப்பட்டன. ஆசிரியம், வெண்பா, வஞ்சி, கலிப்பாக்களே அவை. இந்நான்கு பாக்களைப் பற்றிச் சற்று விரிவாகவும், செய்யுள் தோன்றும் வரையறைபற்றியும் தம் செய்யுளியலுள் ஆசிரியர் பேசுகிறார்.

தொல்காப்பியர் காலத்தில் இன்று இருப்பதுபோல் அடிகளை எண்ணிப் பாவகையினைக் கூறும் முறை இல்லை. அதற்கு மாறாக எழுத்தினை எண்ணிமட்டும் குறளடி, சிந்தடி, நேரடி, நெடிலடி, கழிநெடிலடி என்றே கூறப்பட்டது. நாலு எழுத்து முதல் ஆறு எழுத்து இறுதியாக வருவன குறளடி எனப்படும். ஏழு முதல் ஒன்பது எழுத்து வரை வருவன சிந்தடி எனப்படும். பத்து எழுத்து முதல் பதினான்கெழுத்துவரை நேரடி எனப்படும். பதினேழுவரை வருவன நெடிலடி எனவும், அதனை விஞ்சியன கழிநெடிலடி என்றும் அழைக்கப்படும். இவ்வாறு எழுத்து எண்ணும் பொழுது உயிரில்லாத மெய் எழுத்துக்கள் எண்ணிக்கையில் சேரா. குற்றியலுகரமும், முற்றியலுகரமும் எண்ணப்படா.

வெண்பாவைப்பற்றித் தொல் ஆசிரியர் கருத்தை ஈண்டுக் காணுதல் சிறப்பாகும். தொல்லாசிரியர்காலத்தில் "வெண்பா" என்றால் இன்று வழங்கும் இன்னிசை வெண்பாவை மட்டுமே குறிக்கும்.

"அளவுஞ் சிந்தும்
வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத்
தன்மை யான."
(தொல். இளம். 364)

அளவடியும், சிந்தடியும் வெண்பாவிற்கு உரியன. அப்போது தளை ஒன்றாது என்றார். தளை ஒன்றும் போது நெடிலடியும் வரும் என்றார். இவ்வளவே விதி என்றார். வெண்பா என்றவுடன் இன்னிசை என்றோ, நேரிசை என்றோ தொல்காப்பியர் கூறினாரில்லை. சிலப்பதிகாரத்தின் சில காதைகளின் இறுதியில் காணப்பெறும் சில வெண்பாக்கள் நேரிசையாகக் காணப்படுகின்றன. ஆனால் கானல்வரி, வாழ்த்துக் காதைகளில் இளங்கோவடிகள் ஒரு நேரிசை வெண்பாவைக் கூடப் பாடவில்லை. இதிலிருந்து இளங்கோ அடிகள் காலத்தில் இவ்வேறுபாடுகள் தோன்றவில்லை என்பதும், பிற்காலத்தில் வந்த யாரோ நேரிசை வெண்பாக்களை நயத்தோடு பாடிச் சேர்த்து இருக்க வேண்டும் என்பதே அறிஞர் முடிபு.

பாட்டு எழுதவேண்டும் என்ற எண்ணம் வந்தவுடன், "எழுத்துக்கள் தமிழா இல்லையா? வல்லினமா, மெல்லினமா?" என்பனவெல்லாம் அறியா மக்கள் பாட்டு எழுதப் புறப்பட்டுவிட்ட காலம் இது. ஆனால் அப்பாட்டிற்கும் இலக்கண வரையறைகள் உண்டு என்பதை இனியாவது உணர வேண்டுகிறேன்.

"யாப்பு" என்றால் என்ன? அதன் பகுதி யாது? என்பவை எண்ணத்தில் கொள்ள வேண்டியன. எழுத்துக்களைக்கொண்டு அசையாக்கிச் சீர் என்றும், அவை இரண்டோ, மூன்றோ, நான்கோ சேர்ந்து வருகையில் அடி என்றும் அழைக்கப்பெறும்.

இனி அந்த யாப்பின் பகுதி என்ன? பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்று ஏழு வகைப்படும் என்றார். இந்த முறை மரபாகவும் வழங்கப்பட்டதொன்று என்றும்கூறுகிறார். அதன்பின்னர் மரபு, எதுகை, மோனை, வெண்பாக்களுக்குரிய ஓசை முறைகளை முறையே கூறுகிறார்.

இனி இப்பாக்கள் எவ்வெப் பொருளைப் பாடுதற்கு வரும் என்பதைக் கூறுகிறார். அறம்-பொருள்-இன்பம் ஆகிய மூன்று கூறுகளைப்பற்றிப் பொதுவாக நான்கு பாக்களும் வரும் என்றார். சிறப்பாக, புறநிலை வாழ்த்து என்பது வெண்பா, ஆசிரியம் இரண்டிலும் மட்டும் வரும். வாயுறை வாழ்த்தும், அவையடக்கியலும் வெண்பா, ஆசிரியத்திலே வரும். இந்நான்கு வகைப் பாக்கள் சிறப்பாக வாழ்த்துக்குப் பயன்படுத்தலாம் என்பார்.

வாயுறை வாழ்த்து என்றால் என்ன? உற்ற நண்பர் இருவர் வாழ்வில் தவறும் வேளையில், விருப்பு, வெறுப்புக் காரணமாக வேறுபடும் பொழுது சுட்டிக்காட்டி, தவறைத் தவறு என்று வெளிப்படக் கூறித் தடுத்தலும்—கண்டித்தலும் ஆகும். அவ்வாறு கண்டித்தலுடன், அறவுரைப்படிசென்றால் இனிது வாழ்வாயாக என்ற வாழ்த்தும் இறுதியில் முடியும் தன்மையது.

அவையடக்கியல் என்பது தன் கருத்துக்களை வெளிப்படுத்தும் முன்னர், மற்றவர்கள் முன் தன்னை எளிமைப்படுத்திக் கூறுதலாகும்.

பரிபாடல் வகை எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்கும் என்கிறார். ஆனால் தொல்காப்பியர் கருதுமாப்போல இன்று பரிபாடல் காணப்படவில்லை. அது வழக்கற்றுப் போய்விட்டது. பரிபாடலில் பல வகைப் பாக்களும் கலந்து வரலாம்; காமத்தையே பொருளாகக் கொண்டு வரும். இது வரையறை. அறத்தினும், பொருளினும் பரிபாடல் இயங்காது.

அங்கதம், பழிகரப்பு என்ற இரண்டு பொருண்மைகள் பேசப்படுகின்றன. குற்றம் நீங்கிய செம்பொருள் கூறுவனவும், அவை நீங்கி வசைபாடும் வகை எனவும் இரண்டு பிரிவுக்குட்படுத்துவார். தான் கூறும் சொற்களை நேரே கூறாமல் மறைத்துக் கூறின் அது பழிகரப்பு அங்கதம் எனப்படும். இவைபயின்று வரும் செய்யுள்களை இரண்டுவகையிற்பிரித்தார். அவை புகழையும், பொருளையும் புலப்படுத்தினால் செவியுறை எனவும், வசையும் நகையும் வரின் அங்கதம் எனவும் வரையறை செய்தார்.

(அடுத்த இதழில் முடியும்)

கழக மாநாட்டில் கலைச்செல்வங்கள்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 24-10-'59 | இதழ் 19

வள்ளுவன் வாழும் வழி

கொடுக்க விரும்பாதவன் சினைமாட்டைப் பிடித்துக் காட்டினானும்! விற்க விருப்பமில்லாதவன், "வெண்டைக்காய் ஒன்று எட்டணா!" என்றானும்.

இந்த விந்தை மனிதர்களின் சந்ததியில் தோன்றியவரா, கொங்குநாட்டுச் சீமான்? அம்மனிதரின் உருவும் புரியவில்லை; உள்ளமும் புரியவில்லை!

"சேலத்தில் இரும்பு ஏது?" என்றார். சில நாள் கழித்து, "அந்த இரும்பால் பயனில்லை; அது தாழ்ந்த வகை இரும்பு!" என்றார். சில நாள் கழித்துக் கொட்டி முழக்கினார், சேலத்து இரும்பை எடுக்கப் போவதாக.

தமிழ்நாடு காங்கிரசு செயற்குழுவின் திருப்பூர்க் கூட்டத்திலே "தமிழ்நாடு என்றே பெயர் வைக்கப்பட வேண்டும்; எல்லைகளை எடுத்துக் கொள்ளக்கூடாது!" என்றெல்லாம் அடித்து நொறுக்கி முழக்கினார். ஆனால் திடீரென்று "அலகபாத் சீமான் சொன்ன பிறகு நாம் மறுக்கலாமா? அவர் சொன்னதையே கேட்போம்!" என்றார்.

பின் ஒரு நாள் மேட்டுப்பாளையத்தில் குமுறினார், "இந்தியாவெங்கும் நிறுவப்படப் போகின்ற 18 பொறியியற் கல்லூரிகளுள் ஒன்றைமட்டுமே தமிழகத்தில் நிறுவுவதா? இன்னும் பல கட்டித் தந்தால்தானே வாழ்வு கொழிக்கும்? என்ன பிழை புரிந்தோம் நாங்கள், நேரு நாதா!" என்றார். அவர்கள் இயக்க ஏடுகளும் அதை மூடி மறைத்து வெளியிட்டன. அறிஞர் அண்ணா அவர்கள் "தென்னகத்திற்கு 2000 கோடி வாங்கி வாருங்கள்!" என்றார். கல்லூரிகள் போதிய அளவில்லை என்ற அதே சுப்பிரமணியனார் "இரண்டாயிரம் கோடி வாங்கி என்ன பண்ணுவது?" என்று கேட்டு, மாறி விழுந்தார்.

இவையெல்லாம், அவரைக் குறித்துப் பல எண்ணங்களைத் தூண்டிவிட்டன. வடநாட்டாரிடம் பல முறை சூடுபட்டதால், பயப்படுகிறாரா அவர்? "தமிழரின் உரிமை உணர்ச்சிகளை. முதலில் முடியாது என்று தடுப்போம். முடியவில்லை என்றால் உடன் பணிந்துவிடுவோம்! அல்லது வேறொருவர் முயற்சியால் பின்னொரு நாள் ஏதேனும் வெற்றி கிட்டினால் அதை நமது என்று சொல்லிக்கொள்ளலாம்! தட்டிக் கேட்பார்தான் இல்லையே!" என்றெண்ணினாரா, அமைச்சர்? எதை எண்ணினாரோ-எண்ணுகிறாரோ, அவர் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுவதையும், ஏளனம் செய்வதையும் விடுத்தாரில்லை. ஆனாலும் காலம் அவருக்கு அவ்வப்போது பாடம் கற்றுத் தந்துகொண்டே இருக்கிறது.

இவற்றுள் ஒன்று திருவள்ளுவர் உருவத்தை அஞ்சல் தலைகளில் பொறித்தல் ஆகும். இதே அமைச்சர் அவ்வேண்டுகோளை ஏளனம் செய்தார். "திருவள்ளுவர் உருவம் யாருக்குத் தெரியும்?" என்றார். "ஆண்டுக்கொரு முறை திருவள்ளுவர் நாள் என்று ஒருநாள் விடுமுறை விடுக!" என இவர் சார்ந்த மாநில அமைச்சரவையைக் கேட்டனர். "அவர் பிறந்தநாள் யாருக்குத் தெரியும்?" என்று கேட்டார் இதே அமைச்சர். கண்ணன் பிறந்த நாளையும் இராமன் பிறந்த நாளையும் கணிக்கத் தெரிந்த அமைச்சரால், இனத்தின் புகழ் பாடும் வள்ளுவனின் நாளைக் கணிக்க முடியவில்லையாம்.

"வள்ளுவனின் உருவத்தை அஞ்சல் தலைகளில் போடுவதற்கு இடமில்லை; முயற்சி செய்வதற்கு மனமுமில்லை" என்ற முறையில் பேசிய அமைச்சரின் கூற்றைக் கிழிப்பதுபோல், அண்மையில் வந்த செய்தி அமைந்துள்ளது. திரு. சுப்பராயன் அவர்கள் நடுஆட்சியில் பதவி ஏற்றதும் சொன்னார்கள், வள்ளுவர் படத்தை அஞ்சல் தலைகளில் அச்சிட எண்ணியுள்ளதாக.

"சமயச்சார்பற்ற அரசை" நடத்தும் தில்லிக் கொற்றத்தினர், இத்துணை நாளும், சமய வெறிபிடித்த வடவர்களான மீரா, கபீர்தாசர் முதலியோர் படங்களையே வெளியிட்ட தவறுக்குக் "கழுவாய்" தேடிக்கொள்வதற்காக, சமய நம்பிக்கையற்ற வள்ளுவன் படத்தை வெளியிட விருக்கின்றனர் -இப்படியும் எண்ணினர் பலர். ஆனால், "வள்ளுவர் படத்தை எம்முறையில் வெளியிடுவது? நிலையான உருத்தெரியாத வள்ளுவரை யோகப்பட்டையோடு காட்டுவதா? தாடி மீசையோடு கமண்டலத்தையும் தந்துதவி, அச்சிடுவதா? மொட்டையாகப் போடுவதா?" என்ற சிக்கல் கிளம்பியிருக்க வேண்டும். இன்றேல் அவர்கள் வட்டாரத்தில் - தமிழ்மக்களின் உரிமை உணர்ச்சியை ஆதரிப்பதுபோல் காட்ட முனைந்த அவர்கள் சரகத்தில்-பல வழியான பேச்சுக்கள் கிளம்பியிருக்க வேண்டியதில்லை. நாமும், பகுத்தறிவுத் தந்தையான வள்ளுவனை, பட்டை, தண்டு வகைகளுடன் காண விழையவில்லை. இது முற்ற முடிந்த முடிபு, தமிழ் மக்கள் யாவரும் ஒப்பும் ஓர் உருவத்தை வரைவதில் சிக்கல்கள் உள்ளன என்றால், பின்வரும் வழியைக் கையாளலாம். பின்வரும் வழி ஏற்கனவே 2-10-'59-ம் நாளிட்ட "இந்து" இதழில் ஆசிரியர்க்கு வரப்பெற்ற மடல்கள் பகுதியில் வெளியிடப் பெற்றுள்ளது. இக்கருத்தைத் தெரிவித்திருப்பவர் திரு. ஜி. இராமசாமி ஆவார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இப்போது "அமெரிக்க மரபு வழி" என்ற புது வரிசை அஞ்சல் தலைகள் வெளியிடப் பெறுகின்றன. அவற்றில் அந்நாட்டின் முன்னோடிகளின் உருவத்தைப் பொறிப்பது என்ற எண்ணம் இருந்தது. அவர்கள் உருவத்தைப் பொறிப்பதைவிட, அவர்கள் பொன்மொழிகளை வெளியிட்டால், நலம் என்றெண்ணினர். இம்முறையால் அவர்கள் சொல்லி வந்த கருத்துக்கள் உலகின் பல பகுதிகளுக்கும் விரைவில் பரவக்கூடும் என்ற நல்லெண்ணமே இதற்கு அடிப்படை. அமெரிக்கத் தலைவர்கள் அனைவரின் உயிரோவியங்களும் அவர்களிடம் தெளிவாக இருந்தும், அவற்றைவிட அவர்கள் சொன்ன பொன்மொழிகளுக்கே அதிக மதிப்புத் தரப்படுகிறது. ஆம்! உருவிற்கு இருக்கும் மதிப்பைவிட, கருத்திற்கு இருக்கும் மதிப்பை நன்கு உணர்ந்திருக்கின்றனர் அன்னார். இந்த முறையையே இந்திய அரசினரும் கைக்கொண்டால் என்ன?

வள்ளுவரது தெள்ளிய உருவம் நம்மிடம் இல்லை. கலைகள் பல வளர்த்த தமிழினம், அதன் புகழ் வளர்த்த வள்ளுவனின் உருவை வைத்துக் காப்பாற்றத் தவறிவிட்டது. ஆனால் காலத்தாலும் பகைவர் காழ்ப்பாலும், மறுப்பாலும் மாற்றார் ஏசலாலும், மறையாத-அழியாத எழிலோவியம் ஆகி ஒளி வீசுகின்றது, அவன் குறள்! என்றும் அழியாப் பொன்னொளியாய்த் தலை தூக்கி நிற்கிறது, அவன் தந்த கருத்துப் பேழை!

அந்த ஆயிரத்து முந்நூற்று முப்பதாநங் குறள்களிலும் சிறப்பான ஒன்றை எடுத்து-எல்லோரும் ஏற்கும் ஒளி மணி ஒன்றை எடுத்து, அஞ்சல் தலைகளில் பொறித்தால், சிக்கலும் தீரும்; இன்றைய உலகிற்கு வேண்டியனவான பல அருங் கருத்துக்கள் பலவும் விரைவில் கிட்டும். தோழர் ஜி. இராமசாமி அவர்கள் கருதுவதுபோல அஞ்சல் தலைகளின் மூலம் அக்கருத்துக்கள் உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் பரவும்; அமைதியை-ஒற்றுமையை-தோழமையை வளர்க்கும்.

கடந்த கிழமையில் ஓரிடத்தில் குன்றக்குடி அடிகளாரும் இதே கருத்தை வழிமொழிந்திருக்கிறார். ஆக, சிக்கலை வளர்க்கும் வள்ளுவர் உருவத்தைவிட, அவர் பொன்மொழியைப் பொறிப்பதை, சமயத்தலைவர்களும் ஒப்புகின்றனர் என்பது வெளிப்படை.

ஆக, இனியும் என்ன தடை, வள்ளுவன் குறளை வையமெலாம் பரப்ப? தமிழினத்திற்கு தில்லி தன் மரியாதையைச் செலுத்தி, தமிழகம் உலகெங்கணும் தலைநிமிர்ந்து நிற்க வேறு என்ன தடை?

சொல்லிச் சொல்லிக் காலத்தைக் கழிக்காமல், தில்லி அரசினரே! உடன் செயல்படுவீர்! உடன் செயல்படுவீர்! ★

வரவேற்புக் குழுவும் தொண்டர் படையும்

தோழர் செங்குட்டுவன்

சென்னை மாவட்ட தி. மு. கழக மூன்றாவது மாநாட்டு வரவேற்புக் குழுவினர், மிகச் சீரிய பணியைப் பெருமையுடனும் பொறுப்புடனும் ஆற்றிக் காட்டியிருக்கின்றனர். சிறந்த முறையில் நடைபெற்று முடிந்த இம்மாநாட்டில், ஏறக்குறைய 35 ஆயிரம் ரூபாய் மீதி கண்டிருக்கின்றனர். தோழர்கள் **கண்ணபிரானும், இளஞ்சேரலாதனும் செங்குட்டுவனும்** இந்த முயற்சிகளில் பட்ட பாட்டை உடன் இருந்தோரே அறிவர். அவர்களை நாம் வாழ்த்துகிறோம்.

தொண்டர் படையினரும் தம் பங்கைச் செவ்வனே ஆற்றுவதில் இம்மியும் தவறவில்லை. "அவர் மனிதரா? விமானமா?" என்று கண்டோர் வியந்து கேட்க, சுழன்று சுழன்று பணியாற்றினார், தோழர் **நல்லதம்பி** எம். சி. தன் தொண்டர்களுடன். "ஆண்களுக்கு நாங்கள் என்ன இளைத்தவர்களா?" என்று கேட்டனர் பெண் தொண்டர் படையினர். **அலமேலு அப்பாத்துரை** எம். சி. அவர்களைத் தலைவியாகவும் **புகழரசி** அவர்களைத் துணைத் தலைவியாகவும் கொண்ட பெண்டிர் படை ஆற்றிய தொண்டும் மறக்கமுடியாதன.

பொருளாளர் **அ. பொ. அரசு** அவர்கள், பல நேரங்களில் தொண்டர் படைக்கு வேலையே இல்லாமல் செய்துவிட்டார். தொண்டர்கள் வருவதற்கு முன் அவரே சென்று தண்ணீரை நிரப்புவதும், கொடியைக் கட்டுவதுமாக அவர் காட்டிய அக்கறை தி. மு. க. தொண்டர்கள் எந்நிலைக்கு உயர்ந்தாலும் தொண்டுள்ளத்தை இழந்திடார் என்பதைக் காட்டிற்று.

அல்ஜீரியா

இன்று எல்லோர் நாவிலும் அடிபடும் பெயர் - பத்திரிகைகளில் நாள்தோறும் அச்சேறும் பெயர் - அல்ஜீரியா. இந்த நாடு எங்கிருக்கிறது, இதன் வரலாறு யாது, இதன் பூகோளம் என்ன, இந்த நாட்டின் சிறப்பியல்புகள் யாவை— இவற்றைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாய்விட்டது. அல்ஜீரியாவைப் பற்றிய விவரங்களைக் கீழே காணலாம்.

பிரெஞ்சுக்காரர்களால் 1830-ல் கைப்பற்றப்பட்ட இந்த நாட்டில் இருந்தமக்கள் தீவிரமான, வெறி பிடித்த, மூடநம்பிக்கைகள் உடைய மலைநாட்டு வீரர்களாக இருந்தார்கள். மலைநாட்டு மக்களுக்கிடையே இயல்பாக உள்ள சாதிக் கலகமும், கிராமப் போர்களும்,சர்வசாதாரணமாக இருந்தன. ஆகவேதான் அல்ஜீரியாவைப் பிரெஞ்சுக்காரர்கள் வெகு எளிதில் கைப்பற்றினார்கள். இன்று இங்கே முழுக்க முழுக்கப் பிரெஞ்சு நாகரிகம்,கல்வி, பழக்க வழக்கங்கள் பரவியுள்ளன.

ஆப்பிரிக்காவின் வடக்கிலுள்ளது அல்ஜீரியா. இதை ஒட்டி மொராக்கோவும், டுனிசியாவும் உள்ளன. மலைகள் நிரம்பிய பகுதி இது. அல்ஜீரியாவில் ஓர் ஆண்டில் சராசரி 30 அங்குல மழை பெய்கிறது; 77 டிகிரிக்குமேல் வெய்யில் காய்வதில்லை. ஆகவே பலவிதமான மரங்கள் நிறைந்த காடுகள் இங்கு அதிகமாயுள்ளன. நல்ல வியாபாரம் தேடித்தரும் ஒருவிதமான புல் இங்கு ஏராளமாக விளைகிறது. இங்குள்ள மக்கள் திறமை வாய்ந்த தோட்டக்காரர்களாகவும், நல்ல மாடு மேய்ப்பவர்களாகவும் உள்ளனர். அல்ஜீரியாவில் வீடுகள் எல்லாம் மலையுச்சியில் அமைந்துள்ளன. கற்களால் கட்டப்பட்ட வீடுகள்; அவைகள்மீது ஓடுகள் வேய்ந்து வீடுகளை வசதியாக்கி வசிக்கிறார்கள். இங்கு கிராமத்து வீதிகள் குறுகலாயும், அசுத்தமாயும் இருக்கும்.

அல்ஜீரியா, மொராக்கோ, டுனிசியா பகுதிகளில் அராபிய நாகரிகம் பரவியிருந்ததை நன்றாகக் காணலாம். ஒவ்வொரு நகரத்திலும் அராபியர்கள் வாழும் தனிப் பகுதிகளைக் காண்கிறோம். இந்த நகரங்களில் ஐரோப்பியர்கள் வெகு சிலரே உள்ளனர். பிரெஞ்சு ஆட்சிக்குப் பிறகு, சட்டமும், அமைதியும் நன்றாகப் பாதுகாக்கப்படுவதால், உள்நாட்டுக் கலகங்களும், குழப்பங்களும் வெகுவாகக் குறைந்துவிட்டன. அராபியர்கள் ஏராளமான ஆடுமாடுகள், ஒட்டகங்கள் வளர்த்து, அதன்மூலம் பெரும் பணம் சம்பாதிக்கும் செல்வந்தர்களாய் இருக்கிறார்கள். இந்நகரங்களின் வியாபாரமும் முழுவதும் மொசபைட்டுகள், கபில்கள், யூதர்கள் ஆகியோரிடம் அடங்கியுள்ளது.

சித்தூர் நகராட்சி மன்றத்தில் நம் குரல் முழக்கும் தோழர் நரசிம்மன் ஆந்திரத்தில் நமக்குக் கிடைத்துள்ள முதல் வெற்றி இது. இவர் தொண்டு வெல்க! வளர்க!

அல்ஜீரியாவைச் சுற்றிலும் ஐந்து துறைமுகங்கள் உள்ளன. ஐந்தும் செயற்கைத் துறைமுகங்களே. அல்ஜியர்சும் ஓரானும் இவற்றில் பெரியவை. புதுமையும் பழமையும் கலந்துறவாடும் அல்ஜியர்சில் சுமார் 3 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பல நாகரிக வசதிகளோடு வாழ்கிறார்கள். ஆறு அடுக்கு மாளிகைகளும், நீண்ட வீதிகளும், நிறைந்த நகர் இது. ஒரு பகுதியில் அராபியர்கள் தனியாக வாழ்கிறார்கள். வெகு விரைவில் உண்டாகிய ஒரு துறைமுகம் இது; ஆதலால் அல்ஜீரியர்சைப்போல் பெருத்த துறைமுகமல்ல. கிழக்கு மொராக்கோவுடன் தொடர்புகொள்ள இத்துறைமுகம் உதவுகிறது. ஸ்பெயினுக்கு அருகில் உள்ளதால் இங்குள்ள ஐரோப்பியர்களில் பெரும்பாலோர் ஸ்பானியர்களாய் உள்ளனர். மற்றும் சிடிபெல் அபீஸ், ட்லெம்சன் என்ற இரண்டு துறைமுகங்களும் உள்ளன. சிடிபெல் அபீசில் பழத்தோட்டங்கள் பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாகும். பிரெஞ்சு நாகரிகம் முழுவதும் பரவியுள்ள இந்நகரம், கடல் மட்டத்திற்குமேல் 1500 அடி உயரத்தில் உள்ளது.

அல்ஜீரியாவில் அடிக்கடி மாதச் சந்தைகள் நடைபெறுகின்றன. ஒருவிதமான புல் எளிதில் முளைப்பதால் இது பல இடங்களிலும் விளைவிக்கப்படுகிறது. கயிறு திரிக்கவும், காகிதம் செய்யவும் இப்புல் பயன்படுகிறது. ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானது இத்தகைய புல். சந்தை நாட்களில் புல்லுக்கு நன்றாக வியாபாரம் உண்டு. ட்ரின் என்ற ஒரு தாவரமும் இங்கு அதிகமாக விளைகிறது. பிராணிகளுக்கு இது நல்ல உணவாகும் பார்லி, கோதுமை, ஓட்ஸ் முதலிய பொருள்களும் இங்கு விளைவிக்கப்படுகின்றன.

மலைகள் நிறைய இருப்பதால் அல்ஜீரியாவில் உலோக வகைகள் நிறையக் கிடக்கின்றன. உதாரணமாக பாஸ்பேட்ஸ், இரும்பு, நிலக்கரி, செம்பு, பெட்ரோலியம் முதலியவைகளைச் சொல்லலாம். அல்ஜீரியாவில் டெபசா, செடிப் முதலிய இடங்களில் இப்பொருள்கள் கிடைக்கின்றன. புதிய புதிய புகை வண்டிப் பாதைகள் போடப்பட்டு, இந்நகரங்களுக்கும் இதர துறைமுகப் பட்டினங்களுக்கும் போக்குவரவுத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ள. நிலக்கரி இங்கு கிடைத்தாலும் தேவையான அளவிற்குக் குறைவாகவே இருப்பதால், பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. மின்னுற்றல் வசதியும் தேவையான அளவிற்கு உற்பத்தி செய்யப்படுவதால் நாகரிக வசதிகளுக்குக் குறைவில்லாமல் இருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அல்ஜீரியாவில் இரும்புக் கனிகள் 10,46,000 டன்கள், ஈயம் 13,800 டன்கள், துத்தநாகம் 34,000 டன்கள், நிலக்கரி 8,800 டன்கள், செப்பு 2,300 டன்கள் பெட்ரோலியம் 1400 டன்கள், கிடைத்துள்ளன. இதிலிருந்து இந்த நாட்டின் இயற்கை வளத்தை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளலாம். டுனிசிலும் 5,53,700 டன் இரும்பும், 30,000 டன் ஈயமும், 8,000 டன் துத்தநாகமும் கிடைத்துள்ளன. மொராக்கோவிலும் இத்தகைய உலோகப் பொருள்கள் கிடைக்கின்றன. ஆனால் அவைகளைத் தோண்டி எடுக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அல்ஜீரியா இயற்கை வளமும், செயற்கை வளமும் கொழித்து விளங்கும் ஒரு நாடு. பழமரங்களும் தோட்டங்களும் பூத்துக் குலுங்கும் எழில் நாடு. ஆகவே பிரெஞ்சு ஏகாதிபத்தியம் இந்த நாட்டைக் கொள்ளை கொள்ளும் பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளது பிரெஞ்சு நாகரிகத்தாலும், ஆட்சியாலும் அல்ஜீரியா, ட்யூனிசியா, மொராக்கோ ஆகியவை முன்னேறியிருக்கின்றன என்பதாலேயே, அவை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு அடி பணிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

அல்ஜீரியாவில் சமீப காலத்தில் பல குழப்பங்களும், கலகங்களும் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. இவைகளுக்கு முற்றுப்புள்ளியாக அங்கு அண்மையில் ஒரு பெரிய படைப் புரட்சி நடைபெற்றுள்ளது. இந்த நேரத்தில் பிரான்சின் அரசியல் குழப்பத்தைப் போக்குவதற்காக அதிகாரப் பொறுப்பில் ஏறி அமர்ந்துள்ள டிகாலே என்ற சர்வாதிகாரி, "அல்ஜீரியாவிற்கு என்னென்ன நன்மைகளும், உரிமை வழங்கப் போகிறார்? அவைகளை அல்ஜீரியர்கள் ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா?" என்பதை சனநாயக உலகம் வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

பதவியேற்ற புதிதில் டிகாலே அல்ஜீரியாவுக்குப் பறந்து நிலைமையை நேரில் கண்டறிந்தார். அங்குள்ள உள்ளாட்சிகளில் (நகராட்சி முதலியவற்றில்) உடனே தேர்தல்கள் நடத்த முடிவு செய்தார். ஆனால் அங்குள்ள தேசியவாதிகளோ தங்களுடைய விடுதலைக் கோரிக்கைகளைப்பற்றி ஒரு முடிவிற்கு வராதவரையில் இத்தகைய தேர்தல்களால் ஒரு பயனும் வராது என்று திட்டவட்டமாய் அறிவித்துவிட்டனர். பிரான்சிலிருந்து முழுவதும் விடுதலை பெறத் துடிக்கும் தேசிய விடுதலை முன்னணியினர் வெகு வலிவாக வேலை செய்து வருகின்றனர். விடுதலை முரசு கொட்டும் இந்த வீரர்களுக்குப் பல இடங்களிலிருந்து படைகளும் பணமும், இதர வசதிகளும் கிடைத்துவருகின்றன. மதப்பற்று கொண்ட முஸ்லீம்களும் இந்த அணியில் சேர்ந்திருக்கின்றனர் என்றால் அல்ஜீரியாவில் இருக்கும் ஐரோப்பியர்கள் அலறித் துடிப்பதில் ஆச்சரியமில்லை. பிரெஞ்சுக்காரர்களுக்கு ஒப்பான மரியாதை கொடுப்பதாகக் கூறியதையும் "வேண்டாம், எங்களுக்கு வேண்டுவது முழு விடுதலைதான்" என்று

நா. சகந்நாதன் எம். ஏ

அல்ஜீரிய மக்கள் வீர முழக்கம் செய்கிறார்கள். பிரெஞ்சுத் துருப்புகள் எத்தனை நாட்கள் போரிட்டாலும், எத்தனை பீரங்கிகள் சுட்டாலும் களைக்காமல் போராடும் வீர இளைஞர்கள் விடுதலைப் படையில் இருப்பதால், பிரெஞ்சு சர்வாதிகார ஆட்சியை நிலை நிறுத்த டிகாலே கொண்டுள்ள திட்டம், தவிடு பொடியாகி விட்டால் வியப்படைவதற்கில்லை. அல்ஜீரிய விடுதலைக்கு மொராக்கோ, டுனீசியா முதலிய பகுதிகளும், மிகவாக ஒத்துழைத்து மேற்கத்திய அரபுக் கூட்டரசு ஏற்படுத்த முனைகின்றன.

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் காலத்திற்கேற்பத் தன் கொள்கைகளை மாற்றிக் கொண்டு, அல்ஜீரியாவிற்குச் சுதந்திரம் வழங்கினால்தான் உலகில் தனக்குள்ள கொஞ்சநஞ்சம் பெயரையாகிலும்காப்பாற்றி கொள்ள முடியும். இல்லையேல் இருபதாம் நூற்றண்டில் சனநாயகத்திற்குச் சாவு மணி அடித்த பெருமை-சுதந்திரக் கிளர்ச்சியை முறியடித்த புகழ்—விடுதலைப் போரைத் தோற்கடித்த கித்தாப்பு-பிரான்சுக்குக் கிடைக்கும். ஆனால் வரலாறு படிக்கும் பின் சந்ததியினர் பிரான்சைத் திட்டுவார்கள். அந்நிலைக்குப் பிரான்சு ஆளாகக் கூடாது, அல்ஜீரிய மக்கள் அவ்வளவு தூரம் பிரான்சை விட்டு வைக்கமாட்டார்கள் என்று நம்பி, அடுத்து என்ன நிகழப் போகிறது என்பதை ஆவலோடு எதிர்பார்ப்போம். ★

"திருமதி"- தமிழ்ச் சொல்லே!

இல்லாத ஊருக்கு, செல்லாத பாதை காட்டுவோரே! விழி திறப்பீர்! தமிழ்மொழி யறிவீர்! பொருள் குறித்தனவே சொற்கள்! திராவிட மொழிகள் அனைத்திலும் திருமதி காணீர்!

சென்னை மாநகராட்சி மன்ற அலுவல்களில் இனி "ஸ்ரீமான்"-"ஸ்ரீமதியை" நீக்கி 'திருவாளர்' 'திருமதி'யைப் பயன்படுத்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினர். இத்தீர்மானத்தை வரவேற்றுப் பல நகராட்சி மன்றங்களும் தங்கள் தங்கள் மன்றங்களிலும் நிறைவேற்றிக்கொண்டன.

பெரியோர்களே! சிலர் தீர்மானம் எதைப்பற்றி என்பதை விட்டுவிட்டு, "யார் கொண்டு வந்தனர்?" என்ற வீண் முயற்சியில் இறங்கி இருக்கின்றனர். தமிழை வளர்க்கின்றேன் என்று குரல் கொடுத்துக்கொண்டும்-தமிழ் அரசர் கொடிகளை அடையாளமாக இட்டுக்கொண்டும், தமிழ்மொழிக்கே இழிவு தேட முயல்கின்றனர் சிலர். இவர்கள் தமிழை எதிர்க்கின்றார்களா? திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கின்றார்களா? என்று நோக்கின் திருமதியை எதிர்ப்பதின் மூலம் 'மதி'யையே எதிர்க்கின்றார்கள். 'மதி' என்ற அழகிய தமிழ்ச் சொல்லை இது வட சொல்-சமஸ்கிருதத்தின் உரிமைப் பொருள் என்று "தமிழன்" என்பவரே வாதமிடுகிறார். இங்கே வாதமிடுபவர் சமஸ்கிருதக்காரர் அல்ல; தமிழர். சமஸ்கிருதக்காரர் 'மதி' தங்கள் மூலச் சொத்து என்றால் அந்த வாதத்திற்குப் பொருள் இருக்கிறது என்று நினைக்கலாம். "இதோ உங்களுடைய உரிமைப் பொருளை எனது உடன் பிறவி உபயோகித்துக் கொள்ளப் பார்க்கிறான். ஐயோ! இது அடுக்குமா? சே! சே! அவன் அதனைத் தனதாக்கிப் பெருமைப்படுவதா? கூடவே கூடாது. 'மதி' வட சொல். அய்யா, அதுவட சொல்! எங்கள் கழகப் புலவரே அலசி ஆராய்ந்து சொல்லிவிட்டார். ஆகவே வடமொழிப் பண்டிதர்களே! பாருங்கள் இந்த அநியாயத்தை! 'மதி' என்ற உங்கள் உரிமைப் பொருளை, தி மு. கழகத்தான் தன்னுடையது என்கிறான்" என்று அலறி அழுது, அங்கலாய்க்கிறார் சிலம்புச் செல்வர்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களின் உரை நடையைப்பற்றி குறிப்பிடும்போது "நுண்ணிய மதியும்" என்று குறிப்பிட்டு, அதில் உள்ள மதியைத் தடித்த எழுத்துக்களில் அச்சிட்டு "மதி-வடசொல்" என வாதமிடுகிறார். மேலும் சும்மா இராமல் மதுரையில் கூடிய புலவர் குழு "தி மு. கழகத்திற்கு 'திருமதி வடசொல்' என்று ஏன் வற்புறுத்தவில்லை?" என்கிறார். அங்ஙனம் வாதமிடும் அவர் மதி என்பது வடசொல் என்று எதிலிருந்து கண்டுபிடித்தாரோ? மதி வடசொல்தான் என்று சமஸ்கிருதப் பேராசிரியர்கள் யாராவது மொழியியல் வழி நின்று அவருக்கு எடுத்துக் காட்டினார்களா? சமஸ்கிருதப் பண்டிதர்கள் தம்முடையது என்னாததை இவர் ஏன் வலிந்து அவர்களுடையது என்று ஏன் வாதமிட வேண்டும்? மேலும் தி. மு க. தீர்மானம் வருவதற்கு முன்பிருந்தே சமஸ்கிருதப் பற்றுடையவர்கள் தங்கள் இதழ்களில் 'திருவாளர்' என்றும், 'திருமதி' என்றும் எழுதி வருகின்றார்கள். ஆனால் தமிழ் அரசை அமைப்போம் என்று கூறிக்கொண்டு வரும் இவர்கள் தூய தமிழ்ச் சொற்களை எல்லாம் வடசொல் எனக் கூறிக்கொண்டு பேரிகை கொட்டிப் பிழைத்து வருகின்றனர்.

இஃது ஒருபுறம் இருக்க, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமது உரைநடையில் "**நுண்ணிய மதியும்**" என்று குறிப்பிட்டது மிகவும் பொருத்தம்; உண்மை. எங்ஙனமெனின் "மதிநுட்ப நூலோ டுடையார்க்கு" என்ற திருக்குறளுக்கு விளக்கவுரை எழுதப் போந்த ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் "நு பமதியெனற் பாலது செய்யுள் நோக்கி மதி நுட்பமெனப் பின் முன்னாகப் புணர்ந்து நின்றது." என்கிறார் ஆகவே பேராசிரியர் சுந்தரம் பிள்ளை பிழை செய்தாரில்லை என்பது தேற்றம். நிற்க.

'மதி' என்ற இந்தப் பொதுச் சொல்லைப் பற்றி ஆராயின் "மதி" தூய தமிழ்ச்சொல் என்பது தெள்ளிதின் விளங்குகின்றது.

1. மதி-இயற்கை அறிவு (Understanding Intelect, Natural acuteness) எனப்படுகிறது.
2. மதி-சந்திரன், முழுச்சந்திரன். [பிறைமதி, வளர்மதி, நிறைமதி இப்படிப் பல இடங்களில் கையாளப்பட்டிருக்கிறது]
3. மதி-திங்கள்.
4. மதிக்கலை-சந்திர கலை.
5. மதிசூடி-சந்திரனைச் சூடிய சிவன்.
6. மதிநெறி-சந்திர வமிசம்.
7. மதிப்பகை-சந்திரனது பகை கேது.
8. மதிநாள்-ஐந்தாவது நட்சத்திரம் மிருகசீரிட நாள்.
9. மதிமகன்-சந்திரன் மகன்.
10. மதிநூல்-சைன பரமாகமம். சைனர்கள் சைனம் என்றாலே அறிவு கொண்டு எதனையும் ஆயும் நெறியினர் என்று தங்களைக் கூறிக்கொள்கின்றனர். ஆகவே சைன பரமாகமத்திற்கு மதிநூல் என வழங்கினர்.
11. மதிமான்-அறிவுள்ள மனிதன்
12. மதிமுகம்-சந்திரன் போன்ற முகம்.
13. மதிமணல்-சந்திரனைப் போன்ற வெள்ளை.
14. மதிநுட்பம்-நுண்ணறிவு. மணல்.
15. மதி-ஒன்று என்னும் எண்ணைக் குறிக்கும் குழூஉக்குறி.
16. மதி-த்தல்—அளவிடுதல்.
17. மதிகம்-Matico Plaut ஒருவகை மிளகுச்செடி.
18. மதிக்கணம்-'ஒரு நிரைக்கும் இரண்டு நேர்' என்ற யாப்பு விதிக்கும் கூறுவது உண்டு.

இலக்கணம்

மதி-முன்னிலை அசைச்சொல்.

"பரிசில் நல்குமதி"-(திருமுரு. 295) பரிசில் நல்குவான். இங்கே மதி படர்க்கை யசைச்சொல்.

கேண்மதி-என்பதில் கேள் என்னும் ஏவல் வினை முற்றோடு மதி என்னும் அசைச்சொல் சேர்ந்திருப்பதால் மதி என்பது தமிழ்ச் சொல்லே என்பது தேற்றம். வடசொல்லை அசைச் சொல்லாகச் சேர்த்து எழுதுதல் தமிழ் இலக்கணிகள் இயல்பன்று.

மேலும் எல்லாச் சொல்லும் பொருள் குறித்துதான் வரும். பொருள் குறியாத எந்தச் சொல்லையும் தமிழில் **சொல்** என்று சொன்னார்கள் இல்லை. இது "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரத்தால் அறிகிறோம். ஆகவே சொற்கள் காட்சிப் பொருளையோ, கருத்துப் பொருளையோ அறிவிக்கும் பொருட்டு வழங்கப் படுவன என்பது தெரியவருகிறது. அசைநிலையைப் பற்றி ஆசிரியர் **நச்சினார்க்கினியர்**, "தாம் சார்ந்த சொற்களின் பொருளை யுணர்த்தியும், அச்சொற்களை அசைத்தும் நிற்றலின், அசைநிலையும் பொருள் குறித்தனவேயாம். சொற்கள் ஓசை நிறைத்து நின்றே பொருளுணர்த்த வேண்டுதலின் இசைநிறையும் பொருளுணர்த்திற்றேயாம்." என்கிறார்.

ஆகவே அசைநிலைச் சொற்கள் ஏனைய சொற்களைப்போலப் பண்டைக் காலத்தில் தமக்கெனச் சிறப்புப் பொருளுடையதாகவும், அவற்றின் சிறப்புப் பொருள் அறியப்படா தொழிந்த காலத்தில் அவை அசைநிலைகள் எனவும் கூறப்பட்டன என்பதும் மொழிநூல் வல்லுணர் கொள்கை என்கிறார். ஒரு முதுபெரும் இலக்கணப் பேராசிரியரான, பன்மொழிப் புலவர் வே. வேங்கடராஜலு ரெட்டியார் அவர்கள். மேலும் அவர் கூறுகிறார், **கண்டீர், காணும், என்ப, அன்றே** முதலிய சொற்கள சிறப்புப் பொருளுடையனவாகவும், அவற்றின் பொருள் சிறவாத இடத்தில் அவற்றை அசைநிலை எனக் கூறுதல் போலவே, **மதி, ஒரும், வாழியர், மோ** முதலிய சொற்களும் அங்ஙனமே என்கிறார். மேலும் அவர் விளக்கம் செய்வதாவது:

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் மிகப் பழைய காலத்தில் ஒரே மொழியாக வழங்கி வந்தன என்பதும், பின்னரே அவை வெவ்வேறு மொழிகளாகப் பிரிவுற்றன என்பதும் ஆராய்ச்சியாளர் முடிபுகள். தமிழ்மொழியில அசைநிலையாகக் கொள்ளப்பட்டுள்ளசொற்களுட் சிலவற்றிற்கு மலையாளம் முதலிய மொழிகளில் சிறப்புப்பொருள் உள்ளது.

மதி-(மலையாளத்தில்) போதும் என்பது பொருள்.

மதி-(தமிழில்) போதும் என்ற பொருளில்:

(1) **'வேழ முகவை நல்குமதி**
தாழா விகைத் தகைவெய் யோயே'

(புறம். 369)

அஃதாவது 'வேழ முகவை நல்கு; அதுவே போதும்' என்பதாம்.

(2) **'.... ....கலிமாத்**
தாஅத் தாளினை மெல்ல ஒதுங்க
இடிமறந் தேமதி வலவ குவிமுகை'

(அகம். 134)

இங்கும் மதி என்ற சொல்லுக்கு போதும் என்ற பொருள் அமைகின்றது. அதாவது 'கலிமா மெல்ல நடக்கும்படி, அதனை இடித்தலை மறந்து ஏவு; அது சாலும்' எனப் பொருள்படுகின்றது. இஃது ஒருபுறம் நிற்க.

மதிவே-(கன்னடத்தில்) திருமணம். [தூய திராவிட மொழி என்கின்றனர், கன்னடப் பேராசிரியர்கள்.]

மதி-வணிகா மணமகன்.

மதி-வணிகெத்தி=மணமகள் [அவர்கள் சந்திரனைத் **திங்கள்** என்றே வழங்குகின்றனர்.]

மதிமே-(துளுவில்) திருமணம் என்பது பொருள்.

மதி-யின் ஒளியைக் கூறுமிடத்து நிலவு என்றே கூறினர். மதியொளி என்பது வழக்கத்தில் இல்லை. "நிலவுப் பயன்கொள்ளு நெடுமணன் முற்றத்து" (நெடுநல். 95). 'நீ துயிலெழுவாய். நிலவு வெளிப்படும்" என்பது பத்துப்பாட்டில தோழி கூற்று.

நிலவு வெளிப்படும்-மதியின் ஒளி வந்துவிட்டது என்பதாம்.

நிலவு நாழிகை-சந்திரன் நிழலைக் கொண்டு கணிக்கும் நாழிகை.

வடமொழி-தமிழ்.
சந்திரன் -மதி.
சந்திரிகை -நிலவு.

வடமொழி

மதி-மதுப்பிரத்தியயம்=உடையவன்

இங்கு இலக்கணப் பேராசிரியர் அசைச்சொல்லைப் பற்றி மேற்கண்ட விளக்கம் கூறியதை பொப்ப, மதி-எனின் உடையவன் - உடையவள் என்ற பொருள் இருந்து இருக்கும். அந்தப் பொருள் அறியப்படா தொழிந்த காலை வடநூலார் **மதுப்பிரத்தியயம்** என வலிந்து பொருள் கொண்டுவிட்டமையால், தமிழன் தன் சோம்பலால் தன்னை மறந்து வடமொழிக்குத் தன்னைத் தலைப்படுத்திவிட்டான்.

— 8-ம் பக்கம் —

— முன் இதழ்த் தொடர்ச்சி —

வருங்கால உலகில் தமிழ்

தேனிலும் தென்றலிலும். தேம் பழங்களாகிய முப்பழங்களின் சாற்றிலும், இயலிசை நாடகமாகிய முத்தமிழிலும் தமிழர் கண்ட மூவாப் பண்பு, சாவிறந்த இளமைப்பண்பு தான் முத்தமிழ்ப் பண்பு. முத்தமிழ் விழா நம் தமிழுலகிலும், தமிழ் சூழ்ந்த தகைசான்ற நாகரிக உலகிலும் இப் பண்பின் கூறுகளைத் தமிழ் மாகடலின் அலைகளாக தமிழ் அகல் வானின் இசையலைகளாக இங்கிருந்து நாற்றிசையிலும் சூழ்திசைகளிலும் பரப்பவேண்டும்.

மூன்று ஆங்கிலம், மூன்று சமஸ்கிருதம், மூன்றுசீனம் எனபனபோன்ற தொடர்களை யாரும் எங்கும் கேட்டதில்லை! அப்படி இருக்கத் தமிழன் மட்டும் தமிழை மூன்று தமிழ் என்று வகுப்பானேன் ?

இதுபற்றிச் சற்று ஆழ்ந்து ஆய்பவர்கட்கு விளங்கும், மூன்று தமிழும் மூவகைக் கலைகள், கலையின் முத்திறப்பட்ட இயற் கூறுகள் ஆகும் என்பது. தமிழர் இதனைக் கண்டுணர்ந்திருந்ததாலேயே தமிழ்க் கலைகளை முத்தமிழ் என்று வகுத்தனர் என்னலாம்.

ஆனல் கலைகள் இவைமட்டுமல்ல. ஓவியம், சிற்பம், கட்டுமானக் கலை; ஆடல்; அவிநயம்; மலையேறல்; நீந்துதல்; வாள் வீச்சு; கழைக்கூத்து செப்படி வித்தை முதலிய எத்தனையோ கலைகளைப்பற்றி நாம் கேள்விப்படுகிறோம். பண்டைத் தமிழர் இவைகளையெல்லாம் விலக்கி முத்தமிழைமட்டும் கலையாக வகுப்பானேன் ?

மலையேறல், செப்படி வித்தை போன்றவைகள் கவின் கலைகள் அல்ல என்று கூறப்படலாம். ஆனல் ஓவியமும் கட்டுமானமும், ஆடலும் அவிநயமும் கவின் கலைகளே. அவற்றை ஏன் ஒதுக்கி முத்தமிழ்க் கலைகள் மட்டும் வகை செய்யப்பட வேண்டும் ?

இவற்றுக்கு விடை விளக்கம் 'முத்தமிழ்' என்ற சொல்லிலேயே அடங்கியுள்ளது.

இலக்கியம், இசை, நாடகம்-இந்த மூன்றும் மட்டுமே மொழி சார்ந்த கலைகள்; கலை சார்ந்த மொழிவகுப்புகள். கலையின் தன்மையிலும் மொழியின் தன்மையிலும் வேறெம்மொழியினராலும் இன்றளவும் காணப் பெருமல் மறைந்து கிடக்கும் இந்தப் புதை நுட்பத்தைத் தமிழர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே கண்டு, 'முத்தமிழ்' என்ற தொடர் மரபுமூலம் நமக்குப் பண்புரிமையாக விட்டுச் சென்றுள்ளனர். ஈடும்எடுப்புமில்லாத இத்தகைய நுண்மாண் நுழைபுலத்தினர் இனமரபில் வந்தவர்கள் நாம் என்பதில் தமிழரும்; அத்தமிழினத்தின் பழமையில் இழைந்த பழமை மரபினர் நாம் என்பதில் தமிழ் ஆழ்ந்த பிற கீழ்த் திசையினரும் நன்கு பெருமைகொள்ளுதல் தகும்.

முத்தமிழ் மரபு பேணி வந்துள்ளவர் தமிழர். ஆனல் அதற்குரியவர் தமிழர்மட்டுமல்ல. முன் தமிழராகிய தென்னக மக்கள் அனைவருமே தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, குடகு ஆகிய திசைத் தமிழ்கள் பேசும் யாவருமே அதற்கு உரியவராவர். அதுமட்டுமன்று. கீழ் திசைப்பேரினங்கள் அனைத்துக்குமே, உலகப் பேரினங்கள் பெரும்பாலானவற்றுக்குமே அதில் தனித் தலைப் பங்கு உண்டு. ஏனெனில் மூலத் தொல் பழங் காலத் தமிழகம் இன்றையத் தென்னகமும் இலங்கையும் மட்டுமல்ல. அ இவை சூழ்ந்த பிற பல மரபினங்களையும் உள்ளடக்கியது.

இன்று உலகில் ஐந்து கண்டங்களும் ஐந்து மாகடல்களும் உள்ளன. ஆனல் ஐந்து கண்டங்களிலும் இன்று நாகரிக மனிதன் நடமாடினுலும், ஐந்து மாகடல்களில் மூன்று மாகடல்களே இன்னும் அவன் நடமாட்டத்துக்குரியனவாயிருந்து வருகின்றன நில நூல் படிப்பவர் இதனைக் கவனித்திருத்தல் கூடும். அணிமை இடைக் காலத்தில், ஒரு நானூறு ஆண்டுகளுக்குமுன், கண்டங்களுள் மூன்று கண்டங்களிலேயே மனித நாகரிகம் ஒருங்கொத்து நடமாடிற்று. ஆனல் நெடுங் காலத்துக்குமுன், பல்லாயிரம், பன்னூருயிரம் ஆண்டுகளுக்குமுன் உலகில் இந்த மாகடல், மாகண்டப் பாகுபாடுகளே முற்றிலும் மாறியிருந்தன என்பது நிலப் பழமை ஆய்வாளர்களுக்குள்மட்டுமே தெரிய வரும் செய்தி ஆகும். அன்று உலகில் மூன்று கண்டங்களும் உயிரோட்டமுடையதாக ஒரு பெருங் கடலுமே இருந்தன.

மூன்று கண்டங்கள் வடமாகண்டம், மேலைமா கண்டம் அல்லது அத்லாந்திஸ், தென்மா கண்டம் அல்லது குமரிக் கண்டம் என்பன. பெருங்கடல் இவற்றின் நடுவே கிடந்தது. இன்றைய நடு நிலக் கடலின் பெரு விரிவாக அது உலகின் நடுமா கடலாகவே பாய்ந்திருந்தது. மனித நாகரிகம் இம்மாகடலின் தெற்கிலுள்ள இருமா கண்டங்களிலும் அம்மாகடற்கரைகளிலும் மட்டுமே பரவியிருந்தது வடமாகண்டம் மனித இனமே நெடுங்காலம் பரவாத, பரவிய பின்பும் நாகரிக உலகினுடன் தொடர்பில்லாத பிற்போக்காயிருந்த கண்டமாகவே நிலவிற்று.

'மூ'ப்பழமைக் காலத்திய வடமா கண்டப் பகுதிகள் இன்று ஐந்து கண்டங்களிலும் சிதறி, ஆசியாவின் வடமேற்குப் பகுதி, ஐரோப்பாவின் வடகிழக்குப் பகுதி, ஆபிரிக்காவின் வடமேற்குப் பகுதி, அமெரிக்காவின் கிழக்குப் பகுதி என வேறுபட்டுக் கிடக்கின்றன. மனித இனம் நெடுநாள் பரவாத, பரவிய பின்னும் நெடுநாள் நாகரிகம் தழைக்காத, நாகரிக உலகின் முற்போக்குக்குத் தடையாயிருந்து வந்துள்ள இடங்கள் இவையே.

மேலைமா கண்டத்தின் பெரும் பகுதி கடலுளாழ்ந்து இன்று அத்லாந்திக் மாகடலாகியுள்ளது. இன்றைய மேலை நாகரிக நாடுகள் அதன் சிதறிய பழம் பகுதி சார்ந்தவையே.

தென்மா கண்டம் அல்லது குமரிக் கண்டம் மனித நாகரிகம் தோன்றி இடையருது வளர்ந்து மூவா இளமை கண்ட இடம். அது இன்றையத் தென்னகத்தையும் இலங்கையையும், ஆபிரிக்காவின் வடகிழக்கு கிழக்குப் பகுதிகளையும், தென்கிழக்கு ஆசியாவையும். கிழக்கிந்தியத்தீவுகளையும், தென்சீன, சப்பான் பகுதிகளையும், மேற்கு, நடு அமெரிககாவையும் உட்கொண்டிருந்த பெரும் பரப்பு ஆகும்.

பண்டைக் குமரிக்கண்டம்அல்லது 'மூ' மாநிலம் இதுவே. அதன் பெயர்களில் ஒன்று 'எல்' என்பது. ஈழம் என்ற இலங்கைத்தீவப் பெயரும், இலங்கை என்ற பெயரும், 'யாழ்ப்பாணம்' என்ற பெயரும் அதிலிருந்து தோன்றியவையே என்று அறிஞர் பலர் கருதுகின்றனர். இன்று சிறு தீவாகக் குறுகிக் கிடக்கும இலங்கையின் மாபெரு விரிவாகைப் பெருங் கண்டத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெருமக்களின் பல கிளையினப் பெயர்கள், மலை ஆற்றுப்பெயர்கள், குடிப்பெயர்கள் இன்றும் உலகெங்கும் பல மனித இனக் கிளைகளின் பெயர்களாகவும நிலப்பகுதி, கடற்பகுதிப் பெயர்களாகவும், குடி, ஊர், மலை, ஆற்றுப்பெயர்களாகவும் நிலவுகின்றன.

மூன்றும் ஏழும் தமிழர்க்கும் ஏனைய நாகரிக உலகத்து மக்கட்கும் திருஎண்களானதால் மூல எழுவாய் 'மூ', 'எல்' என்ற பண்டைத் தமிழின நிலப் பெயரிலேயே காணப்பட வேண்டுமென்றும் பல அறிஞர் கருதுகின்றனர்.

முத்தமிழ்ப் பண்பு இங்ஙனம் இலங்கை, தென்னகமுள்ளடக்கிய தமிழ்த் தாயகத்துக்கு மட்டுமன்றி, இலங்கை முழுமைக்கும் மலாயா, சீன, சப்பான் உட்பட்ட தென்கிழக்காசியா முழுமைக்கும்; இன்னும் பரந்த அளவில் நாகரிக உலக முழுமைக்கும் பொதுவுரிமைப்பட்ட நாகரிக மூல மரபேயாகும். தமிழளவில், அதுவும் தேய்ந்த தமிழக மரபுச் சாயலினளவில் குறுகிவிட்ட அப் பண்பை மீண்டும் மனிதஇனமளாவிய உலக அரங்கில் பரப்பவேண்டிய பொறுப்பு இன்று தமிழனுக்கு-சிறப்பாகத் தொல்காப்பியர் நேர்மரபில் வந்த இலங்கைத் தமிழனுக்கு உண்டு.

★

இன்று தமிழின மொழிகள் என்று வகுக்கப்படும் தென்னக மொழிகள் மட்டுமல்ல, திராவிட மொழிகள் என்ற குழுவில் இடம்பெறும் தென்னக, வடஇந்திய மொழிகள் பலவும் 'மூ'த் தமிழ்மொழியிலிருந்து கிளைத்தவைகளே. ஆனல் வருங்கால ஆராய்ச்சிகள் இந்த 'மூ' இனத் தொடர்பை வடஇந்தியத் தாய்மொழிகள்; பாளி, சமஸ்கிருதம்; சிங்களம், மலாய்; சீனம், சப்பானியம்; அரபு, பாரசிகம் முதலிய பண்டை நாகரிக மொழிகள், இனமரபுகள் ஆகியவற்றிலும் காணப்போவது உறுதி. இவற்றுள் சில மொழிகள் இன்று ஆசியமொழிக் குழு என்ற இந்து ஜெர்மானியக் கூட்டுறவில் சேர்க்கப்பட்டாலும், அது கலப்பு வகையாலன்றிப் பிறப்பு வகையாலன்று என்பதும்; இந்து ஜெர்மானிய மொழிக் குழு பொதுவாக வடமாகண்டத்துக்குரியதாயினும், அதற்கும் மூலமரபும் மூலநாகரிக ஒளி முதலும் தமிழகமே என்பதும் ஆராய்ச்சியால் படிப்படியாகவேனும் தெளிவடையத்தக்க செய்திகளேயாகும்.

உலக நாகரிகத்தில் இன்றைய நாகரிக மொழிகள் பலவும் புதுமொழிகளே. இவற்றுக்கு முன்னிருந்த இடைக்கால மொழிகள், பழங்கால மொழிகள் பல அழிவுற்றுவிட்டன. அழியாத பழமைவாய்ந்த மொழிகள்-நானூறு ஆண்டுகட்கு மேற்பட்ட மொழிப் பழமையும் தொடர்ச்சியும் இலக்கிய இலக்கண வாழ்வும் உடைய உலகமொழிகள்-இலங்கையையும் தென்னகத்தையும் சுற்றியுள்ள ஒரு சில மொழிகள் மட்டுமே. பழமைமிக்க மொழிகளாக இன்னும் பலரால் பாராட்டப்படும் சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீனம் ஆகியவை. நிலவாமொழிகள் மட்டுமல்ல; 400 ஆண்டுகட்கு மேற்பட்ட இலக்கிய வாழ்வு இவற்றுக்குக் கிடையா என்பதும் குறிப்பிடத்தக்கது. தென்னக மொழிகளும் சிங்களமும் சீனமும் சப்பானியமுமே இத்தகைய நீடித்த வாழ்வின் வாய்ப்புப் பெற்றுள்ளன.

உலகில் நாகரிகத்தைப் படைத்து உருவாக்குவதில் தமிழனுக்கு இருந்த பங்கு பெரிது. வருங்காலத்திலும் அவனுக்குரிய பங்கு, பொறுப்புப் பெரிதேயாகும். ஆனல் இன்றைய உலகில் சென்ற சில நூற்றுண்டுகளாக நிலவிய கீழ்த்திசையின் அடிமைத்தனம் மற்ற இனங்கள் எவற்றையும் விடத் தமிழனையே மிகுதியாகப் பிடித்துள்ளது. இன்றைய உலகில் எங்குமே-எந்த மாநிலத்திலுமே அவன் இடமின்றி, உரிமையின்றித் திண்டாடுகிருன். தன் மொழி பேணி உலக மொழிகளின் வளம் பெருக்க, தன் கலை வளர்த்து உலகக் கலை வளத்தில் ஒத்துழைக்க, தன் இனம் வளர்த்து மன்னின நாகரிகம் பொங்கவைக்க அவனுக்கு உரிமையில்லை. இதனை ஓரளவு உணர்ந்தே இலங்கைத் தமிழர்இன்று தமிழ் வளர்ச்சிக்கென்று ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்க முன்வந்துள்ளனர். இவ்வார்வம்

— 11-ம் பக்கம் —

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்.

பழம்பாடல் வரிகளை எடுத்தாள்வது தவறு?

— முன் இதழ்த் தொடர்ச்சி —

இவ்வாறே, அடியையும் அடிகளையும் எடுத்தாண்டு, எடுத்தாளுவதற்கு முந்தி அதற்கிருந்த அழகைக் காட்டிலும், எடுத்தாளப்பட்ட பின்னர் அதன் அழகும் சிறப்பும் அதிகரித்து, இன்பம் சேர்த்த சான்றுகளை நாம் ஆங்கிலத்திலும் பரக்கக் காணலாம். எடுத்துக்காட்டிற்கு ஒன்று தருவேன்.

I am dying, Egypt, dying,
Ebbs the Crimson life-tide fast
And the dark Plutonium shadows
Gather on the evening blast.

என்னும் இது W. H. Lytle (in Antony and Cleopatra) என்பாரின் சொல்லோவியம். இந்தச் சொல்லோவியத்தின் முதலிரண்டடிகள் ஆங்கிலக் கவிஞர்தங்கோவாம் ஷேக்ஸ்பியரிடத்தே இருந்து எடுத்தாளப்பட்டவை என்பதைக் கேட்டுத் திடுக்கிட வேண்டாம். ஷேக்ஸ்பியரின் படைப்பில் இச்சொற்கள் வரும் இடத்தின் சிறப்பை மிஞ்சுவது Lytle கையாண்ட இடத்தின் சிறப்பு. சோடையென்று யாரும் சொன்னதில்லையே! மாருகப் பாரட்டுகின்றனர்.

எனவே சுருங்கிய ஒரு கருத்து விரிக்கப்படும்பொழுது அதன் அழகும் சுவையும் அதிகப்படுவதுண்டு என்னும் உண்மையைத் தெளிந்து திருக்குறளின் அதே கருத்து திருக்குறளில் இருந்து பொருள் புலப்படுத்துவதைக் காட்டிலும் சிலம்பிலே எடுத்தாளப்படுகையில் எழில் பெறுகின்றது என்பதையும் வற்புறுத்துகிறேம்; இவ்வாறே ஷேக்ஸ்பியரின் கருத்தும் Lytle-ன் கருத்தொடும் கைவண்ணத்தொடும் கலக்கவே எழிலும் ஏற்றமும் பெற்றது என்பதும் முடிவாகின்றது.

அடிகள் எடுத்தாளப்படும் விதங்களிலே ஒரு சிலவற்றைக் கண்டோம். இனி, பாடல்கள் எடுத்தாளப்படும் வகையைக் காண்போம்.

2. பாடல்கள்...

அடிகளை எடுத்தாளுவதில் பொருள் இருக்கின்றது. முழுப் பாடல்களையே எடுத்தாளுவது ஏன்? தம்மால் பாட முடியாது என்பதற்காகவோ, பாடினால் சிறக்காது என்பதற்காகவோ அல்ல, முழுப் பாடல்களை எடுத்தாளுவது! குறிப்பிட்ட ஓரிடத்தில் இன்னொர் பாடிய பாட்டின் எழில் இன்பம் சேர்ப்பதாக-உயர்வு கூட்டுவதாக இருக்கின்றது. எனவே "நாமாக மற்றொரு பாடலைப் பாடுவதைக் காட்டிலும் அதன் சிறப்பைக் கருதி அதையே இங்கு நாம் எடுத்தாளுவோம்!" என்ற எண்ணமே முழுப்பாடல்களை எடுத்தாளுவதற்குக் காரணமாக அமைகிறது.

இவ்வாறு எடுத்தாளுவதிலும் பல வகை உண்டு. சிலர், அந்த அழகிய பாடலை முதற்பாடலாக வைத்துக்கொண்டு பிறகு தாம் பாடிச் செல்வர். தம் பாடல்களின் இடையில் அப்பாடல்களைப் பொதித்துச் செல்லுவர். மற்றும் சிலர் வேறு விதமாகக் கையாளுவர்.

இவ்வகைகளில் முழுப்பாடல்கள் எடுத்தாளப்படும் நிலையைக் கோவை இலக்கியங்களிலும், கலம்பகங்களிலும் தான் பெரும்பாலாகக் காணலாம். பிற இலக்கியங்களிலும் இவ்வகையில் எடுத்தாளப்படுவது உண்டென்றலும் வெகு அருமையாய்த்தான் அவை காணக்கிடக்கின்றன. இவற்றைப் பிறசெய்யுட் கவி என்றும் குறிப்பர்கள். இனி, சான்றுக்குச் சில காண்போம்.

கடிமணம் புரிவதற்கு முந்தைய காதலொழுக்கத்தைக் 'களவு' என்று தமிழிலக்கியங்கள் கூறும். கடிமணம் முடித்துக் கற்பு வாழ்வைத் துவங்குவதற்குக் காதலர்கள் வேட்கையோடு காத்திருப்பார்கள் - முயல்வார்கள். காதல் கொண்டவர்கள் இத்தகைய நிலையில் இரவும் பகலும் காதல் வாதையிலே கலந்திருந்து ஏங்குவர். ஏக்கம் மனிதனை எந்த அளவிற்குப் பேதையாக்கி விடுகின்றது என்பதை இந்த இடத்திலே மிகத் தெளிவாகக் காணலாம்.

காமமிக்க கழிபடர் கிளவி என்பது ஒரு துறை. அதாவது வேட்கை மிகுகின்றபோது கடலையும் சோலையையும் பறவைகளையும் பார்த்துத் தன் வருத்தத்தைத் தெரிவித்து இரங்குதல்.

இந்த வகைத் துறைக்குத் தஞ்சைவாணன் கோவையில் "மாதுற்ற மேனி வரையுற்ற விலலி" என்னும் திருக்கோவையார்ப் பாடல் - முழுப் பாடல் எடுத்தாளப்பட்டிருக்கின்றது.

"தன்னுட்கையா றெய்திடு கிளவி" என்னும் துறைக்கும் திருக்கோவையாரின் 177-ம் பாடல் தஞ்சைவாணன் கோவையில் எடுத்தாளப்பட்டிருக்கின்றது.

இவ்வாறே தஞ்சைவாணன் கோவையில் திருக்கோவையார்ப் பாடல்களே யன்றிப் பிறகோவைப் பாடல்களும், வேறு இலக்கியத்தின் பாடல்களும் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக "வரலிங்கரிய" என்னும் 198-வது அம்பிகாபதி கோவையே 195-வது தஞ்சைவாணன் கோவைப் பாடலாகத் "தலைவி தன்றுணைக் குரைத்தல்" என்னும் துறைக்கு எடுத்தாளப்பட்டிருக்கின்றது.

"அவனவட் புலம்பல்" என்னும் துறைக்கு வரும் 273-வது தஞ்சைவாணன் கோவைப்பாடலே, 319-வது அம்பிகாபதிக் கோவை 'விழி குழியும்படி' என வருகின்றது.

மேலும், இவ்வாறே, 408-வது அம்பிகாபதிக் கோவை 'ஏடார்மலர்க் குழல்', 'தலைவிசேணகன்றமை செவிலி, தாய்க்குணர்த்தல்' என்னும் துறையில் தஞ்சைவாணன் கோவைப் பாடலாக இடம் பெற்றுள்ளது.

இவ்வகையே, 'வடமால் வரை நிரை' எனத் துவங்கும் 325-ம் அம்பிகாபதிக் கோவை பாங்கி கையடை கொடுத்தல் துறைக்குத் த. கோ. வில் வருகின்றது. இவ்வாறே 213 ம் திருக்கோவையாரும் 314-ம் த. கோ. வாக வருகின்றது.

'தன் மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல்' துறைக்கு 'அரக்காம்பல்' என்னும் 398-வது நாலடியார் வருகின்றது. தாமே தமக்கொப்பென்னும் 224 - வது திருக்கோவையாரும் தஞ்சைவாணன் கோவைத் துறைப் பாடலாக வருகின்றது.

இவ்வாறே பிற கோவைகளிலும், கலம்பகங்களிலும், வேறு பிறவற்றிலும் முழுப்பாடல்கள் எடுத்தாளப்பட்டிருத்தலையும், அவை இதுவரை எவராலும் தூற்றப்படாமலிருத்தலையும் காணலாம். இலக்கியத்திற்கே எழில் சேர்ப்பதாகக் கருதப்படும் இச்செயல் இதுவரையிலும் இகழப்படாமலிருந்து, இப்போதைக்கு இந்த நூற்றாண்டில் சில சில்லறைகளால் இகழப்படுவதிலிருந்தே தமிழ் இலக்கிய வாழ்வில் இரண்டு தரங்கள் இருக்கின்றன என்பது தெரியவருகின்றது. ஒன்று மிக உயரிய அறிவு வாழ்வு; மற்றொன்று மிக மிகத் தாழ்ந்த மடமை வாழ்வு. அறிவு வாழ்வு ஒன்றே இருந்த காலம் ஒன்றிருந்தது; அன்றைய மக்கள் அறிவு நிரம்பியவர்களாக இருந்ததால் எடுத்தாளுதலை வேண்டினார்கள்-விரும்பினார்கள். இன்று தரங்குறைந்த மடமை வாழ்வினர் தோன்றி இருக்கின்றார்கள்; கழ்ப்புக் கொண்டு தூற்றுகின்றார்கள். இந்த வாழ்வு தொலையவேண்டும்; இவர்களும் நம்மொடும் சேர்ந்து அறிவு வாழ்விற்கு வருவார்களாக. அறிவு வாழ்வைப் புதிதாக வேனும் இவர்கள் துவங்கவில்லையென்றால் நிச்சயமாய்ச் சமுதாயத்தில் தோற்றோடிய வேண்டியவர்கள் ஆவார்கள். அறிவு வாழ்வு மலர்வதாக.

இதுவரையும் முழுப்பாடல்கள் எடுத்தாளப்படுதலைச் சான்றுகளுடன் கண்டோம். இனிச் சொலலும் சொற்களும் எடுத்தாளப்பட்டிருக்கின்ற இலக்கியங்களையும் எடுத்தாண்ட அறிஞர் பெருமக்களையும் காண்போம்!

3. சொற்கள்...

வரிகளையும் பாடல்களையுமேயன்றிச் சொற்களையும், அவற்றிற்குரிய சிறப்பான பொருளிலேயே எடுத்தாளுதல் ஒருவகை. இம்முறை தாந்தாம் வழிபடும் கவிஞன் எந்தப் பொருள் சிறந்ததென்று கண்டானே, அன்றி இன்னவிடத்திற்கு இது ஏற்றது என்று கொண்டானே, அதுவே சிறந்தது என்று கொண்டு பாடுதலும் - எடுத்தாளுதலாம். சொல் விளக்கும் பொருள், காலம் மாற மாற வேறுபடுதலும் உண்டு. இருந்தும் தமக்குமுன் இருந்தவன் எந்த இடத்திலே அதை நிறுத்தி எந்த உயிரோட்டத்தை உணர்ச்சியைப் புலப்படுத்தினனே அதேபோல அத்தகைய இடத்திலே அவ்வாறே நிறுத்தி அவ்வகைய பொருண்மையை விளைத்து அதைச் சாகாது காத்தலில் தன் கடமையைச் செய்து நிலைநாட்டுதலாம். சான்றுக்கு ஒன்று காண்க.

ஒரு பொருளைப் பார்த்தலில் பல வகையுண்டு; அதிலே ஒருவகை கூர்மையாகப் பார்த்தல். இப்படிப் பார்க்கப்படும் பார்வை பருகுதல் போலப் பார்க்கும் பார்வை எனப்படும். இதையே வழக்கில் நாம் அள்ளி விழுங்குவதைப்போலப் பார்த்தல் என்கிறேம். இது எவ்வாறு இலக்கியத்தில் அந்நாள் தொட்டு இன்று வரையும் பொருள் சிதையாது-மாருது வருகின்றது என்பதை இனிக் காண்போம்.

"பருகுவனன்ன
அருகா நோக்கம்"

என்பது பொருநராற்றுப் படை 77-ம் வரி.

"பருக நோக்கி"

என்பது கம்ப ராமாயணம். 1. குலமுறை கிளத்துப் படலம். 2.

"பருகுவனள் போல"

என்பது பெருங்கதை (33 : 121-3)

"பருகுவார் போல்விழ்ந்து
பார்ப்பார்"

என்பது குலோத்துங்கன் உலா. 120-ம் கண்ணி.

"பருகுவ னன்ன
ஆர்வத்த னாகி"

என்பது நன்னூல், [நூற்பா-40.]

இவை ஐந்தனையும் கால வரிசைப்படி அமைத்தால், கிட்டத்தட்ட முறையே பொருநராற்றுப் படை, பெருங் கதை, கம்பராமாயணம், குலோத்துங்க சோழனுலா, நன்னூல் என அமையும். கம்பனும், உலாப் பாடிய ஒட்டக்கூத்தரும், நன்னூல் எழுதிய பவனந்தி முனிவரும் கிட்டத்தட்டச் சமகாலத்தவராகலாம். என்றாலும் இவர்க்கு முந்தி இருவர் இருக்கின்றனர். இவர்களில் முந்தியவர் ஆற்றுப் படைகாரர். எனவே இவர்தான் இங்குக் காட்டப் பெற்ற சான்றுகளில் முதல் வழிகாட்டியாகக் காணப்படுகின்றார். என்றாலும் பிற இலக்கியங்களிலும் இந்தச் சொல்லாட்சி இருக்கின்ற காரணத்தால் நம்முடிவு முடிந்த முடிபல்ல. எப்படியாயினும் சொல்லின் நயம் ஒவ்வொரு புலவனையும் தன் பக்கல் ஈர்த்துள்ளது என்பது தெளிவாகின்றது.

தமிழிலே மட்டுமல்ல இந்தச் சொல்லழகு. ஆங்கிலத்திலும் இப்படியே காணக் கிடைக்கின்றது.

Drink to me only with thine eyes
And I will pledge with mine.
(TO CELIA-By BEN JONSON)

கண்ணாலே பருகிக் காதல் கதை பேசவா வேண்டுகிறான், பென்ஜான்சன்? ஆங்கிலத்திற்கும் தமிழ்ற்கும் உள்ள ஒற்றுமையும் இங்கு உயர்ந்த நிலைமையதாக விளங்குகிறது.

1. கருப்பு வில்லி அருப்புக் கணை தூவ.

2. பொருப்பு வில்லைப் பொடி செய்த புண்ணியா! கருப்பு வில்லிறுத் தாட்கொண்டு காவென்றான.

3. கருப்பு வில்லி அருப்புக் கணை தூவ.

4. கருப்புநாண் கருப்புவில் லருப்புக்கணை தூவ

இவை நான்கும் தனித்தனி எந்தெந்த இலக்கியங்களில் வருகின்றன என்று சொல்லமுடியுமா? அன்பர்களுக்கே விடுகிறேன். எடுத்தாளுதல் தவறென்று கூறும் "புலம்பும் செல்வர்" இதற்கு விடை தருவாரா? அல்லது அவரைச் சேர்ந்தவர்கள்தான் தங்கள் இதழ்களில் விடை எழுத முன் வருவார்களா? நிற்க,

ஒரு சொல்லைப் பயன்படுத்தும் போதே அது எடுத்தாண்ட பாடலைப் போன்ற உணர்வை நமக்களிக்கும் சிலவற்றைக் காண்போம். ஒரே சொல் அந்த உணர்வைத் தருமானல் அதனுள்ளே அப்படி என்னதான் மறைந்து கிடக்கிறதோ தெரியவில்லை; என்றாலும் அதைக் காணத்தான் போகிறேம்.

— 10-ம் பக்கம் —

புலவர் துரைமோகனன், வேலூர்.

கழகத்தவர் மீதுள்ள வெறுப்பால் கன்னல் தமிழை மறுப்பதா?

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

ஸ்ரீமத்-பொதுச்சொல்.

மான் விகுதி சேர்த்து ஸ்ரீமான் ஆண்பாலாகவும், 'இ' விகுதி சேர்ந்து ஸ்ரீமதி எனப் பெண்பாலாகவும் கொண்டனர். ஆனால் பல்கலைக் கழக சமஸ்கிருத ஆசிரியர்களைக் கேட்டால், "மதி என்பது சமஸ்கிருதச் சொல் என்று சொல்லமுடியாது. ஆனால் மதி என்பதை வழக்கில் சந்திரனுக்கும், உடையவன் என்ற பொருளுக்கும் பயன்படுத்துகிறோம். அவ்வளவுதான்" என்கின்றனர்.

மேலும் அகப்பொருளில் மதியுடம்பாடு-எனின் தலைவி தலைவன் கருத்தோடு இணங்கியவளாதல் என்பதாம்.

"மக்க ணுதலிய வகனைந் திணையுஞ்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறுஆர்"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு மேற்கோளாக, "மிதிலை மூதூரெய்திய ஞான்றே மதியுடம்பட்ட மாக்கட் சீதை" என்று கம்பர் குறிப்பதை உரையாசிரியர் காட்டுகிறார். மற்றும் மதியுடம்படுத்தல் என்ற அகப்பொருள் சொல்லுக்கு, "தலைவன் தலைவியரிருவர் கருத்தொற்றுமையால் அவர்தம்முட் கூட்ட முண்மையை தோழி யுணரும் அகத்துறையாகும்" என்கிறார் தொல்காப்பியர்.

"குறையுற வுணர்தன் முன்னுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென
மதியுடம் படுத்த லொருமூ வகைத்தே"
(தொல்-பொருள்: 127)

அஃதன்றி மதிப்ப என்ற சொல் தொல்காப்பியப் பொருளதிகாரம், 289-வது சூத்திரத்தால், அஃது ஓர் உவம வாய்ப்பாடாகக் குறிக்கப்படுவதைக் காண்கிறோம்.

மேற்படி ஆய்வுகளால் மதி என்பதை எந்தக் கோணத்தில் இருந்து பார்ப்பினும் அது தூய தமிழ்ச் சொல்லே என்பது துணிபு.

திருமதி-திருவை உடையவள் என்பதுதான் பொருள். மதி எனின் சந்திரனைப் போன்ற முகத்தை உடையவள் என ஆகு பெயராகப் பெண்பாலையே குறிக்கும். திரு என்றாலே இலட்சுமி, செல்வம், அழகு என்பனதான் பொருள். திருவன் என்றாலும் சீமான், திருமான் என்று பொருள்படும். திருவாளன் என்ற சொல் திருமால் என்ற பொருளில் திவ்வியப் பிரபந்தத்தில், "ஒலி திரை நீர்ப் பௌவங் கொண்ட திருவாளன்" என்ற அடிகளால் குறிக்கப்படுகிறது. 'திருவாளன் திருநீறு திலகவதியார்" என பெரிய புராணத்தில் சிவனும் திருவாளன் என்று குறிப்பிடப்படுகிறான்.

மதி-இயற்கை அறிவு என்று பொருள் கூறும்போது, இயற்கை அறிவு படைத்தவள் பெண்பாலே என்பது முடிவு. மதி என்றாலே பெண்ணைக் குறிக்கும் பொதுச் சொல்லாகவும் கொண்டனர். மதி-எனின் பெண் எனக் கொண்டே ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைப் பார்ப்போம். சில உண்மைகள் பெறப்படும். படிக்காத-மின் விசை ஒன்றும் நுழையாத ஒரு பட்டிக்காட்டில் உள்ள பெண் இல்லறம் ஏற்றதும் கணவனைப் பேணவும், குடும்பத்தைக் காக்கவும், வரவு செலவு பார்க்கவும், களத்து மேட்டை மேற்பார்க்கவும், பண்ணையில் உள்ள அனைவர்க்கும் உணவு, உபசாரம், கூலி, பரிசு முதலியன கவனித்தலும், குழந்தைகளைக் காத்தலும், வளர்த்தலும், விருந்தினர் எதிர்கோடலும், பேணலும் இன்ன பிற எல்லாம் தானே எங்கும் கற்காமல், ஒழுங்காக, முறைப்படி நினைவாற்றலுடன் செய்யும் திறமை பெற்று விளங்குகிறாள். இத்தகைய ஆயிரம் ஆயிரம் பேர்களை இன்றும் பட்டிக்காடுகளில் பார்க்கலாம். இதனை மதிநுட்பம் என்றே குறிக்கிறார் வள்ளுவர். வள்ளுவர் இயற்கை அறிவுக்கு, "மதிநுட்ப நூலோடு டையார்க்கு" (குறள்-636) என்ற குறளால் இயற்கை அறிவோடு நூலறிவை உடையார்க்கு என்று உணர்த்துகிறார். மற்றும் மதிகேடன், மதிகேடி என்ற வழக்கும் இருக்கிறது. பெண் இயற்கை அறிவை பாரம்பரியமாகப் பெற்றவள். ஆதலால் அவளுக்கு "இல்லாள்" [எல்லாம் உடையவள்] என்ற பெயரும் அமைந்தது.

இறுதியாக மதி என்ற சொல் பல பொருள்களில் தூயத்தமிழ்ச் சொல்லாகவே, தொல்காப்பியம், பத்துப்பாட்டு, திருக்குறள், நாலடியார், திரிகடுகம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருவாசகம், தேவாரம், திவ்வியப் பிரபந்தம், பிங்கலந்தை, திவாகரம், திருமந்திரம், பெருங்கதை, கம்பராமாயணம், சூடாமணி முதலிய நூல்களில் கையாளப்பட்டு வருகிறது. இதில் யாராவது மதி-யை பிறமொழியிலிருந்து கடன் வாங்கி இருப்பின் பின்னர் வந்த ஆசிரியர்களோ, உரையாசிரியர்களோ தடையின்றித் தெரிவித்து இருப்பர். அதுதான் புலவர் மரபும் நெறியும் பண்பும் ஆகும். ஆகவே அத்தனைப் புலவர்கட்கும் புலப்படாத புதிராக மதி என்று, எங்கு வரினும், அது வடசொல்லே என்றும் கூறுவது மதிநுட்பமாகாது. மொழியியல் வழிநின்றும், பொருள் தேடாது, யார் கொண்டுவந்தனர் அந்தத் தீர்மானம் என்று கட்சி வழிநின்று மதி தேடி அலையும்சிலர் நிலையைக் கண்டு வருந்துகிறோம்.

சிறுவை ந. இனியன்

உயிர்களின் தோழருக்கு உயர்பெரும் மணி விழா!



சமணம் அந்த நாளில் தந்த அணிகளான சிந்தாமணியும் குண்டலகேசியும் சிந்தையை மகிழ்வித்தன. அவை, சமண அறவோர் தமிழுக்குத் தந்த பெருஞ் சொத்துக்கள்; அவை அன்னார் தமிழுக்குச் செய்த பெரும் தொண்டுகள். அந்தத் தொண்டர்களின் வழியில் தோன்றி வாழும் மதிப்பிற்குரிய சிவபந்து சீபால் அவர்கள் சென்னையில் தமிழ் வளர்க்கும் சீராளர்களுள் ஒருவர் ஆவார். அவர், பால்போன்ற உள்ளமும் ஆல்போன்ற அருள் நிழலும் உள்ளவர். 1950-ம் ஆண்டு, சூலைத் திங்களில் காஞ்சியை அடுத்த திருப்பறம்பூரில் பிறந்த இவர், சிறு வயதிலேயே தமிழில் மிகுந்த அக்கறையும் பற்றும் காட்டினார். சமண சமய இலக்கியங்களையும் பிறவற்றையும் பழுதறக் கற்ற இவர், பொதுத் தொண்டில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். சமயத் துறையில் இருந்துவரும் எண்ணரிய தீமைகளை அவ்வப்போது சுட்டிக் காட்டி எழுதி வந்தார். இவர் 1928, 1929-ம் ஆண்டுகளில் பெரியாரின் "குடியரசு" ஏட்டில் எழுதிய கட்டுரைகளே, பின்னர் "புராண ஆபாசங்கள்" என்ற தலைப்பில் நூலாக உருப்பெற்றன. மற்றும், இவர் அவ்வப்போது, கோவில்களில் நடக்கும் பலிக் கொடுமைகளைக் கண்டித்துப் பேசி வந்தார். அச்சலிப்பில்லா முயற்சியால், 1-6-'51 அன்று உயிர்ப்பலி தடைச் சட்டம் அமுலுக்கு வந்தது. ஆனால் இச்சட்டத்தை நிறைவேற்றச் செய்வதற்காக, இவர் மேற்கொண்ட முயற்சிகள், என்றென்றும் இவர் புகழைக் கூறும்.

"எந்தக் கருத்தையும் வெளியிட, கலை நல்ல ஒரு கருவி!" என்பதை உணர்ந்த இவர் 1931-ல் "பாலசுந்தரம் அல்லது பலியின் கொடுமை" "கலியுகப் பிரகலாதன்" எனும் நாடகங்களை எழுதி, வெளியிட்டு, நடித்தார் மக்கள் இவர் சொல்வதைக் கேட்கத் தொடங்கினர்.

இவரது உரை நடை வளத்திற்கு "பாலிடானா யாத்திரை" என்ற கட்டுரை நூல் நல்ல சான்று.

இத்தகு தொண்டருக்கு, கடந்த 9-10-'59 அன்று மணிவிழா நடத்தும் வாய்ப்பைப் பெற்றனர் சென்னைத் தமிழ் மக்கள். டாக்டர் யூ. கிருஷ்ணராவ் அவர்கள் தலைமையில் டாக்டர் அ. சிதம்பரநாதனார் உள்ளிட்ட எண்ணற்ற தமிழ்ப் புலவர் பெருமக்களும் பொதுத் தொண்டர்களும் கூடி, சீபாலின் செந்தமிழ்த் தொண்டையும் அருள் நெறியையும் பாராட்டி வாழ்த்தினர். விழா செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் நடந்தது.

அன்று அன்னார் மணிவிழா நினைவாக, சிறுவை. மோகனசுந்தரம், வித்துவான் கா. சி. தனக்கோடி ஆகியோரால் இயற்றப்பெற்ற "மணி விழா மலர்" ஒன்று வெளியிடப் பெற்றது.

சீபால் அவர்களின் தொண்டுகளைப் பாராட்டி, தமிழகமெங்கணுமிருந்து வாழ்த்துச் செய்திகளும் தந்திகளும் வந்து குவிந்தன.

இவ்விழா அவரது தொண்டுள்ளத்தை மேலும் ஊக்குவித்து நலம் வளர்க்கட்டும் என வாழ்த்துகிறோம். வாழ்க! வாழ்க! ★

உணர்ச்சியும் உண்மையுமே நாடகம் !

எலிசபெத் மகாராணி இங்கிலாந்தை ஆண்டுகொண்டிருந்த காலத்தில் ஆங்கில மொழிவளர்ச்சி உச்சநிலை அடைந்திருந்தது குறிப்பாக ஆங்கில மொழியில் அருமையான நாடகங்கள் பல தோன்றின. அதற்குப் பிறகு பல ஆண்டுகள் நாடகங்கள் தோன்றாமலேயேஇருந்தன. ஆங்கில நாடகங்களின் வளர்ச்சி தடைபட்டுவிட்டதோ என் அஞ்சினர் பலர். ஆனால் 18-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் கோல்டுஸ்மித், செரிடன் போன்ற நாடகாசிரியர்கள் நாடக வளர்ச்சிக்கு விதைகளை ஊன்றினர். 18 வது நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து தலைசிறந்த பல நாடக நடிகர்களைக் கண்டது. ஆனால் நாடகாசிரியர்கள் திறமை படைத்தவர்களாக ஒருவரும் தோன்றவில்லை. பெரும்பாலும் கீழ்த்தரமான நகைச்சுவையோடு கூடிய இரண்டாந்தரமான நாடகங்கள் பல நடிக்கப்பட்டன. இந்தச் சமயத்தில் தான் நாடகத்தில் மறுமலர்ச்சி காண விரும்பிக் கிளம்பினார் V. W. ராபர்ட்சன் என்ற ஒரு நாடக நடிகர். ராபர்ட்சன் நடிகரானாலும் அற்புதமான நாடகங்கள் எழுதும் பேராற்றலைப் பெற்றிருந்தார். வாழ்க்கையின் பிரதிபலிப்பே நாடகம் என்ற தத்துவத்தை, தனது 'சமுதாயம்' என்ற நாடகத்தில் எடுத்துரைத்தார். ஆனால் சமுதாய மறுமலர்ச்சிக்கோ, பொருளாதார சீர்திருத்தத்திற்கோ தனது நாடகத்தை அவர் பயன்படுத்தாததால் மக்கள் மனதில் நாடகாசிரியர்கள் வரிசையில் நல்லதொரு இடத்தை அவர் பெற முடியாமல் போயிற்று. ஆயினும் உண்மை நிகழ்ச்சிகளை நாடகத்தின் மூலம்எடுத்துரைத்து மற்ற நாடகாசிரியர்களுக்குவழிகாட்டினார் ராபர்ட்சன். எனவே 1865-ம் ஆண்டு'சமுதாயம்' என்ற நாடகத்தின்மூலம் நாடக வளர்ச்சிக்கு விதை ஊன்றினார் ராபர்ட்சன் என்பதை அநேகமாக எல்லா இலக்கிய மேதைகளும் ஒத்துக்கொள்கிறார்கள். அவருக்குப் பிறகு தோன்றிய பல நாடகாசிரியர்கள், மக்களை திருப்திப்படுத்துவதற்காகத் தங்கள்பேனாவைத்திருப்பினார்கள். மக்கள் எதைச் சுவைக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து, அவர்களது சுவைக்குத் தக்கவாறுநாடகங்களை அமைத்தார்கள். பின்ரோ, ஜோன்ஸ் போன்ற நாடகாசிரியர்கள் தங்கள் சொந்தக் கற்பனையைவிட மக்கள் சுவையையே பெரிதும் விரும்பியவர்கள். ஜோன்ஸ் எழுதிய "பரிசுத்தவான்களும் பாவிகளும்" (1884) என்ற நாடகம் முழுக்க முழுக்க நாடகம் பார்க்க வருகிறவர்களைத் திருப்திபடுத்துவதற்காகவே எழுதப்பட்டது. இவர்களது நாடகங்களில் ஆங்கில மக்களின் சமுதாய அமைப்பு முறையையோ அவர்களது பண்பாட்டையோ கலைப் பண்பையோ பார்ப்பதற்கு வழியில்லாமல் போய்விட்டது. ஆங்கில மொழியில் புரட்சிகரமான நாடகங்களின் ஆரம்பம் இப்சன் என்ற நார்வே நாட்டு நாடக ஆசிரியரோடு ஆரம்பமாகிறது. கிரின் என்பவரால் ஆங்கில மக்களுக்கு இப்சன் அறிமுகப்படுத்தப்பட்டார். வாழ்க்கையில் நடக்கும் அன்றாட சம்பவங்களை கருப்பொருட்களாக எடுத்துக் கொண்டு தன்னுடைய நாடகங்களைத் தீட்டினார் இப்சன். சமுதாயத்தோடு, சமுதாயப் பழக்க வழக்கங்களோடு ஒத்துப்போவது என்றுமே புரட்சியாகக் கருதப்படமாட்டாது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பது அனுபவ அறிவு. எனவே சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் கண்டித்து செல்லரித்த சமுதாயத்தின் சீர்கேடுகளைச் சித்தரித்துத் தனது நாடகங்களை எழுதி நாடகப்புரட்சிக்கு வித்திட்டார் இப்சன். இப்சனின் நாடகங்களும், நாடகங்களில் வருகின்ற கதாபாத்திரங்களின் குணாதிசயங்களும்பழமை விரும்பிகளுக்குப் பேரிடியாக இருந்தன. நெஞ்சுரமும் புரட்சி மனப்பான்மையும் கொண்ட இப்சன் அவைகளை தூசெனத் தள்ளிவிட்டார். இப்சனுக்குப் பிறகு தோன்றிய ஒரே புரட்சி, நாடகாசிரியன் பெர்னாட்சா. பெர்னாட்சாவின் நாடகங்களை, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவன் அறிஞர் அண்ணாவின் நாடகங்களுக்கு ஒப்பிடலாம். காலஞ்சென்ற கல்கியே அண்ணாவை "தென்னாட்டு பெர்னாட்சா" என்று பாராட்டினார் அவர் எழுதிய 'ஓர் இரவு" கண்டு. பகுத்தறிவுப் பிரசாரத்தையும் சமுதாய சீர்திருத்தத்தையும் நாடகங்களின்மூலம் செய்தார் சா. கலை கலைக்காக அல்ல கலை மக்களுக்காக என்ற தத்துவத்தின்கீழ் இருந்து தொண்டாற்றியவர் அவர். சமுதாய சீர்திருத்தத்திற்காகத்தான் அவர் தன் நாடகங்களை எழுதினாரே தவிர மக்களை திருப்திபடுத்தி அதன் மூலம் காசு சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக அல்ல. சா எழுதிய முதல் நாடகம் 'விதவைகளின் வீடுகள்' என்பது (Widowers Houses). இது 1892-ம் ஆண்டு வெளி வந்தது. ஆங்கில நாடக வளர்ச்சியில் சாவின் பங்கு பெரியது என்பது அவர் எழுதிய 'யுத்தக் கருவிகளும் மனிதனும்' 'காண்டிடா' 'செயின்ட் ஜோன்' 'மனிதனும் அசாதாரண மனிதனும்' (Man and Superman) முதலிய நாடகங்களினின்று தெரிய வருகிறது. சமுதாயப் பிரச்னைகளை வைத்து நாடகம் எழுதியவர்கள் தான் ஜான் கால்ஸ்வர்த்தி, பார்க்கர் போன்றவர்கள். ஆனால் இவர்கள் சமுதாயத்தைச் சாடும்போதும் புரட்சி எண்ணங்களைத் தூவும் பொழுதும் உணர்ச்சிகரமான முறையில் எழுத்துக்களைக் கோர்த்து எண்ணங்களை வடித்தார்கள். ஆனால் சாவின் நாடகங்கள் உணர்ச்சியை எழுப்பவல்ல திறமை படைத்தனவாக இல்லாமலிருந்தாலும், கிண்டல் கேலிமூலம் சமுதாயச் சீர்கேடுகளை மக்கள் மனதில் பதிய வைப்பனவாக இருந்தன குறிப்பாக நகைச்சுவையைப் பெருமளவில் புகுத்தி அதன்மூலம் தன்னுடைய கொள்கையை பரப்புவதற்காக நாடகங்களை எழுதினார் சா. சாவிற்கு பிறகு தோன்றிய சிறந்த நாடகாசிரியர் பேரி. (Barrie) என்பவர் இவர் அரசியல், பொருளாதாரம் சமுதாயம் முதலியவற்றை அறவே மறந்த புராணரீதியில் கற்பனை நாடகங்களை எழுதினார்; அராபியக்கதைப்போக்கில் நாடகங்களைத் தீட்டினார். புகழ்பெற்ற "பீட்டர்பேன்" (Peter Pan) என்ற நாடகத்தை எழுதியவர் இவர்தான். இந்தச் சமயத்தில் ஐரிஷ் எழுச்சி தோன்றவே ஐரிஷ் நாட்டு மக்களின் கலாசாரத்தையும், வீரத்தையும், பண்பாட்டையும் புகழ்ந்து பல நாடகங்கள் எழுதப்பட்டன. J. M. சினஞ் (Synge) என்பவர் ஆறு அற்புதமான நாடகங்கள் எழுதி வெளியிட்டார். இவருடைய நாடகங்கள் அத்தனையும் மக்கள் பேராதரவை பெற்றவை. "சினஞ் எல்லா விதத்திலும் நாடக மேதை ஷேக்ஸ்பியரை ஞாபகப்படுத்துகிறார்" என்று பேராசிரியர்—திறனாய்வாளர் ஹட்சன் கூறியுள்ளார். இவருக்குப் பின் நாடக வசனத்துறையில் ஒரு புதுமை புகுந்தது. கவிதை நாடகங்கள் பல தோன்ற ஆரம்பித்தன. இந்தத் துறையில் பிரசித்திபெற்ற நாடகாசிரியர் ஸ்டீபன் பிலிப்ஸ் என்பவர். ஆனால் கவிதை உலகில் அவ்வளவு திறமை பெற்றவராக அவர் கருதப்படவில்லை. ஜான்டிரிங் வாட்டர் மேஸ்பீல்டு (Drinkwater, Masefield) போன்றவர்களுடைய நாடகங்களில் வருகின்ற வசனங்கள் கவிதைத் தாய்க்கும் உரை நாடகத் தந்தைக்கும் பிறந்தவைகளாக இருந்தன. டிரிங்வாட்டர் எழுதியுள்ள 'ஆபிரகாம் லிங்கன்', 'கிராம்வெல்' 'மேரிஸ்டுவர்ட்'போன்றநாடகங்கள். அவருக்குப்பின் ஜே. எஸ். எலியட்டின் "கத்தீட்ரலில் நடந்த கொலை" என்ற நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதைத் தொடர்ந்து பல நாடகங்கள் ஆங்கில மொழி இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரியத் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. எதிர்காலம் இதைவிடச் சிறந்ததாக இருக்கும் என கைபெல் போன்றவர்கள் கருதுகிறார்கள். அதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

- வீரமாமுனிவன்

வெறுஞ்சொல்லின் தொகுப்புகள் என்றும் வெல்லா !

தமிழில் ஒரு புதுமை!

மா. கி. தசரதன் எம். ஏ.

எழுதிய

"தணலில் தங்கம்"

விற்பனை உரிமை:

"தென்றல்", சென்னை-6.

தனிப் பிரதி ரூ 1-50.
தபால் செலவுடன் ரூ. 1-60.
விற்பனையாளருக்குக் கழிவு 20%.

தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக.

—7-ம் பக்கத் தொடர்ச்சி—

விடுதல் என்பது ஒன்றினிடத்திருந்து ஒன்று அகலுதல்-தொடர்பு அறுதல் என்று பொருள் அதாவது பற்று இருக்குமானல் அது அறுந்து போதலும், இல்லாதிருக்குமானல் அது உண்டாகாதலுமாம். ஆனல். விடுதல் என்றால் தங்குதல் என்னும் பொருளொன்றும் உள்ளது அதை இலக்கிய வாயிலாக அறிந்து, அதைப் பின்னவன் ஒருவன் ஏன் தானும் எடுத்தாண்டான் என்பதையும் அறிய வேண்டும்

"நாகநன் காவினு
ணயந்து விட்டார்களே"

என்பது சீவக சிந்தாமணியின் 1905-ம் பாடல்.

"கொண்டதிகை மாநகருள்
விட்டருளியே"

என்பது கலிங்கத்துப் பரணியின் 299-ம் தாழிசை.

இங்கே தங்குதலாகிய தொழிலை யார் யார் செய்தனர்? கலிங்கத்துப் பரணியில் முதலாம் குலோத்துங்கனே இவ்வாறு தங்கினவன். அங்கு காதலர்கள் தங்கிவிட்டார்கள்.

இவ்வாறே அனைவரும் அறிந்த நிகழ்ச்சியையும் ஒரு சொல்லாலே விளக்கும் திறத்தையும் காணலாம்.

"கொங்கை சுரந்தவருட்
கோமகளே"

என்பது நால்வர்நான்மணி மாலை. 5-ம் பாடல்.

"சுரந்த திருமுலைக்கே"

என்பது திருக்களிற்றுப்படியார்த் திருப்பாடல்.

இங்கு நிகழ்ச்சியே ஒரு சொல்லால் குறிக்கப்பெற்றதாயினும், அச்சொல்லின் முழுப் பொருளும் தெளிவாக விளங்குதற்குக் காரணமாக நிற்பது அந்த நிகழ்ச்சியே. எனவே இங்கு நிகழ்ச்சியும் சொல்லும் ஒக்க மதிப்பைப் பெறுகின்றன.

இனி, ஒரு குறிப்பிட்ட தொழிலுக்குரிய வினைச் சொல் எவ்வாறு ஈடேற்று வருகின்றது என்பதையும் காணலாம்.

'விருந்தாக யாழ்பண்ணி வீணை தான் தோற்பான்" என்னும் இது "பருந்து மதனிழலும்" எனத் துவங்கும் சீவக சிந்தாமணிப் பாடலின் மூன்றுவது அடி.

'இன்னரம் புளரும்
பாடல்கேட் டுருகி
யேழிசை மகரயாழ் பண்ணி'

என்னும் இது, நைடதம் சுயவரப் படலத்திலே 63-ம் பாடலடியாம்.

'இவை இரண்டையும் ஒப்ப நோக்கும்போது பண்ணல், உளர்தல் என்பன இசைக் கருவிகளை இயக்கு முன் செய்துகொள்ளும் ஆயத்த வேலைகள் என்னும் எண்ணம் எழுவதும், இங்கு யாழினைப் பண்ணுந் திறம் கூறப்பட்டது என்று அறிவதும் ஒப்புமை காண்பதற்கும் அவற்றின் சுவையை நுகர்வதற்கும் உரிய தன்மைகளாம்.

இழிவுபடுத்துவது போன்ற முறையில் பாடப்படும் பாட்டுகளை நகைச் சுவைக்காகவும் இலக்கிய நயத்தைச் சிலேடையிட்டு மிகுதிப்படுத்துவதற்காகவும் எடுத்தாளுதல் உண்டு. சான்றுக்கு "அக்காளை ஏறினுராம்" எனும் அடியைக் குறிக்கலாம். விபரீதமான பொருளில் வெறுப்பான நிலையில் இயல்கின்ற இந்தப் பாடலும் ஓர் இலக்கியப் பாடல்தான். இப்பாடலை வெள்ளைக் கவி காளமேகம் பாடினுராம்.

கண்டீரோ பெண்காள்
கடம்பவனத் தீசனர்
பெண்டீர் தமைச்சுமந்த
பித்தனர் எண்புமைக்கும்
மிக்கான தங்கைக்கு
மேலே நெருப்பையிட்டார்
அக்காளை ஏறினு ராம்.

இதை எடுத்தாண்டுள்ள இலக்கியம் எது என்னும் ஆராய்ச்சியை அன்பர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

இவ்வாறே, 'குறும்பு' என்னும் சொல்லுக்கு பாலைநிலத்தூர், வலிமை, அரண், பகைமை, பகைவர், கானவர், சிற்றூர், குறுநில மன்னர், சிறுமைச் செயல், சேட்டைபோன்ற பல பொருள்கள் இருக்க வலிமை என்னும் பொருளிலேயே எடுத்தாளப்படும் சான்றுகளைக் காண்போம்.

'அரவுக் கறும்பெறிந்த
சிறுகட் டீர்வை'

என்பது மலைபடுகடாத்தின் 504-ம் அடி.

'அருவிலைக் குறும்பற
வெறியாய்'

என்பது சோணசைலமாலை 88-வது பாட்டின் 2-ம் அடி.

மலைபடுகடாத்திற்கும் சிவப்பிரகாச சுவாமிகளின் சோணசைலமாலைக்கும் இடையே இந்த ஒற்றுமை.

இவ்வாறே 'கோள்' என்பதற்கும் பல பொருள்கள் இருக்கவும், குலை, கொத்து என்னும் பொருளிலே இலக்கியங்கள் அச்சொல்லை ஆண்டுள்ள நிலையையும் காண்போம்.

"கோட்டெங்கின் குலைவாழை"

என்பது பட்டினப் பாலையின்-16-வது அடி.

"வண்கோட் பலவின்"

என்பது மலைபடு கடாத்தின் 337-ம் அடி.

"கோளிணை கோலக் குரும்பை"

என்பது தஞ்சைவாணன் கோவை 85-ம் பாடல்.

எனுமிவை எல்லாமே ஒரே பொருளினவாக. அழகியனவாக, ஒப்புமைக் சேற்றவையாக இருக்கின்றன. மற்றொன்று காண்போம்

ஓக்குதல் என்றால் வீசுதல்-உயர்த்தல் என்று பொருள். ஓச்சுதலோடு தொடர்புடையது இது. இந்த வினைச் சொல் இரண்டு தனி வேறு இலக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய பதிற்றுப்பத்தின் ஆறும் பத்திலே இரண்டாம் பாடலின் பெயர் சிறுசெங்குவளை. துணங்கைக் கூத்தைத் துவக்கி வைப்பதற்காகச் சேரலாதன் தலைக்கை (அதாவது முதலெடுப்பு) தருகிருன். அப்படித் தரும்போது துணங்கை ஆடும் மகளிர் கையைத் தொட வேண்டும். இப்படி மன்னனும் தொட்டான். இது கண்ட அவன் தேவிக்குக் கடுஞ் சினம் தோன்ற, மன்னனை உருத்துப் பார்த்து, அருவருப்போடு முகத்தை வைத்துக்கொண்டும் தன் சினம் தணியாததால் தன் கையிலே வைத்திருக்கும் சிறிய செங்குவளை மலரை அவன்மேல் வீசி எறிய நோக்குகின்ருள். ஆனல் அதற்குள் திரும்பிவிடுகின்ருள். இந்தக் காட்சியைப் புலவர் பாடுகின்ருர். பாட்டு வேண்டாம் நமக்கு இங்கே; சொல்மட்டும் கண்டு செல்வோம்.

"நின்எறியர் ஒக்கிய
சிறுசெங்குவளை"—

இது பதிற்றுப்பத்தின் 6-ம் பத்தில் இரண்டாம் பாடலின் 22-ம் அடி.

"திருமா வளவன்
தெவ்வர்க்கு ஓக்கிய"

இது பட்டினப் பாலையின் 299-வது அடி.

ஓக்கிய ஒரே செயலை இரண்டும் ஒன்ருகக் கூறுகின்றன. இவை இரண்டுமே சங்க காலத்து நூல்கள் தாம்.

இவ்வாறே 'பாடப்படுமோ பண்ணவ நின்சீர்' என்று கச்சிக் கலம்பகம் இசைக்கும் அடியின் 'பண்ணவ' என்னும் சொல் சிலப்பதிகாரத்தின் அடியொற்றிய பொருளதாய்க் கடவுள் எனப் பொதுப் பெயரோடு பண்நலம் கனிந்தவன் என்பதுடன் ஒப்பது. சிலம்பில் 10-188 காண்க.

இனி, இரண்டு சொற்களை அடியாக வைத்து அடியெடுக்கும் பாடல்களும் உண்டு. இதற்குப் பரிபாடலும் குறளும் சான்றும்.

"காமக்கணிச்சி உடைக்கு
நிறையென்னும்
நாணுத்தாழ்
வீழ்த்த கதவு"

எனும் 1251-ம் குறள்,

"காமக் கணிச்சியாற்
கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச்
சென்றமளி சேர்குவோர்"

என்னும் (10: 34-35) பரிபாடலடியோடு ஒத்தல் காணலாம். காமம், கணிச்சி, வீழ்த்த இந்த மூன்று சொற்களும் இவை இரண்டிலும் எடுத்தாளப் பெறுதலைக் காணலாம்.

இரண்டு மூன்று சொற்களையும் பொருள் சிதையாது வரியும் மிகாது தொடர்பு விடாமல் எடுத்தாளும் வகைக்கு மற்றொரு குறிப்பைக் காணலாம்.

"காழ்வரை நில்லாக்
களிறவன் கைவலத்
தியாழ்வரை நின்றது"

என்பது பெருங்கதை.

"காழ்வரை நில்லாக்
கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கியாங்கு"

என்பது கலித் தொகை - பாலைக்கலி.

பெருங்கதையிலே, உதயணன் கையிலிருந்த யாழுக்கு - யாழின் இசைக்குக் கட்டுப்பட்ட யானையும்; கலித் தொகையில் கானக்குறத்திக் கையின் யாழுக்குக் கட்டுப்பட்ட யானையும் இங்குப் பேசப்படுகின்றன. கலித்தொகை காலத்தால் முற்பட்டது; பெருங்கதை காலத்தால பிற்பட்டது. என்றாலும் நிகழ்ச்சி குறிக்கப்படும்போது சொற்கள் தாமுய் வந்து படிகின்றன. பரிக்கோலால் குத்தப்பட்டும் அசையாத யானை, யாழின் மென்மையான இசையைக் கேட்ட அளவில் பணிந்து வழி நடக்கிறது என்னும் அழகிய காட்சி அமைக்கப் படும்போதே சொற்களும் ஆங்காங்கே வந்து நின்றுவிடுகின்றன. கலியின் சாயல் அப்படியே படிந்துள்ளது, கொங்குவேளிர் மாக்கதையாம் உதயணன் காதையில்.

'ஓடாததானை நளனென்
றுளனொருவன்'

என்னும் தொடர் (நள வெண்பா 1-18) நமக்கு வேறு ஒரு தொடரையும் நினைவூட்டுவதாக அமைகின்றது. அமையும் நினைவு சீவகசிந்தாமணியின் 7-ம் பாடலில் அமைந்துள்ள 'ஓடாததானை' என்பதைக் காட்டுகின்றது.

இவ்வாறே "குடிபுறங் காத்தோம்பி" என்று (549) குறளிலும் 'குடிபுறங் காத்தோம்பும்' என்று (130) கலித்தொகையிலும் வருவன சிந்தித்தற்குரியன.

மழையென மாடமோங்கி
(மலைபடு: 484)

மழைநிறைத்தன்ன
மாடந்தோறும்
(பெருங்: 3 : 16 : 27)

மழைமருண் மாடம்
(சீவக. 2116)

மைம்மழை மாடம்
(குலோ. 100)

என்று மாடத்தின் உயர்வினைக் குறிக்க மழை என்னும் முகிலை மழையாகக் கொண்டு அடையடுத்து வந்தன.

100-வது குறளின் பிற்பகுதி 'கனியிருப்பக் காய்கவர்ந்தற்று' என்பது 'கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே' என்று அப்பர் தேவாரமாக அலர்ந்திருக்கின்றது.

'விழுநிதி. ஈதல்உள்ளமொ
டிசைவேட் குவையே'

என்று மதுரைக் காஞ்சி உரைப்பன 231-ம் குறளிலே காண்க. (ம. கா. அடிகள் : 205-205)

இவ்வகையே 'இனத்தியல்ப தாகும் அறிவு' என்னும் 452-ம் குறள், 'இனத்தியல்பா மறிவென்ப துண்மையே' என்று பிரபுலிங்க லீலையில் (மாயைபூசை கதி-34) தங்கி நிற்கின்றது.

இதே இனத்தைச் சேர்ந்ததே, சொல்லொடும் சொல்லைத் தொடரும் பொருளொடும், கொண்ட பற்றை முன் நிறுத்தி முன் நின்ற கவியடியைத் தானும் எடுத்தாள்கின்ற முறைமையும்.

'நவிறொறும் நூனயம்
போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு'

எனும் குறள்

'நவிறொறும் இனிய
ஞானப் போலப்
பயிறொறும் இனியநின்
பண்புடைக் கிழமை
உள்ளுதொறுள்ளுதொ
றுள்ளம் இன்புற'

என்னும் பெருங் கதையாக மலர்ந்துள்ளது. நவிறொறும், பயிறொறும், பண்புடைமை இங்கு முழங்குகின்றன.

இவைமட்டுமல்ல; முன்னவன் என்ன சொன்னனே, எப்படிச் சொன்னனே அப்படியே தான் பாட வேண்டும் என்னும் விருப்பம் மட்டும் அல்லாது அவன் சொல்லிய முறையையே தழுவும் நிலையும் உண்டு தமிழிலக்கியங்களிலே. எண்ணிய எண்ணம் எழுத்துருக் கொள்ள வேண்டுமானல் எண்ணுயிரம் சொற்கள் கிடைக்கும்; அவற்றால் சொற்சிலம்பமும் ஆடலாம். இது தெரிந்திருந்தும் தனக்குமுன் இருந்தவன் தன் சிந்தனையை எந்தச் சொற் சொற்களால் வடித்தானே அந்தச் சொற்களாலேயே தன்னுடைய அதே சிந்தனையை. வடித்ததற்குக் காரணம், பிறவற்றைவிட இவை அழகியனவாக சிறந்தனவாக-அழுத்தம் தருவனவாக - கவிநயம் செறிந்தனவாக இருப்பதே

ஐந்து சிறு காப்பியங்களிலே சூளாமணியும் ஒன்று. இதன் சொற் சுவையும் பொருட் சுவையும் சீவகசிந்தாமணியை ஒத்தவை. இதை இயற்றியவர் தோலாமொழித்தேவர். இவரையும் இவர் நூலையும்பற்றிப் பலவாறப் புகழ்ந்து பேசுவதற்கு மாறாக ஒரே ஒரு பாடலடியைமட்டும் கூறுவேன். 'சொற்கெட்டா வரன் தோலாமொழி சூளா மணி யுணர்வோர் துறை கண்டோரே" என்பது அந்த அடி. சூளாமணியைப் படித்தோர் துறை காண்பர் என்றால் நூலின் பெருமையையும் தோலாமொழித்தேவர் புலமையையும் நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

(தொடரும்)

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
ஏஜ:அ. சங்குசேர்ஸ், திண்டுக்கல்ரோடு, மதுரை.

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

தமிழ் இனஆர்வமாக, அதே சமயம் தமிழ் கடந்த மனித இனநாகரிகம் வளர்க்கும் முத்தமிழார்வமாக வளர வேண்டுமென்று மனமார விரும்புகிறேன்.

தமிழன் உரிமைகளுள் முக்கியமான ஒன்று தனித்தமிழ் மரபு. அதுவே உலகமொழிகளின் வளர்ச்சி வகையில் தமிழன் கொண்டுள்ள ஒரு கொள்கையின் மணிவிளக்கமும் ஆகும். பொதுவாக, மொழி வளர்ச்சி என்பது உயிர் வளர்ச்சி, மரத்தின் வளர்ச்சிபோன்றது வானமழையோ, காற்றோ அதற்கு நீரும் துணைவளமும் தரலாம். ஆனால் இனப்பண்பாகிய தாய்நிலவளத்திலிருந்தே அது உயிர் வளர்ச்சி பெறமுடியும். அத்துடன் மரத்தின் ஒவ்வோர் இலையும் தாய் நிலத்தின் ஓர் உயிர்க் கூறு, மரவாழ்வுடன் பிறந்து வளர்ந்த கூறு ஆகும். அதுபோல மொழியின் ஒவ்வொரு சொல்லும் சொல்மரபும் இனப்பண்பின் ஆழத்திலிருந்து இனவாழ்வுடன் வாழ்வாக, காலமென்னும் வானுரம் பெற்று வளர்ந்த இனச்செங்கல், இனநீறு, இனவண்ணம், மொழியின் மூலவளத்திலிருந்து சொல்லை ஆக்க, மாற்ற, கூட்ட, குறைக்க மனிதனுக்கு உரிமை உண்டு. ஆனால் அதன் சொற்களை வழங்காமல் அழிக்கும் செயல் இன அழிவுக்கு வழி கோலும். பிறமொழிக் கலப்போ இரட்டிப்புத் தீமை விளைப்பது; அது இனச் சொல் அழிப்பதுடன் இனமரபாகிய மொழியின் இனவேரையும் உயிர்ப்பையுமே குலைப்பதாக நாடமுடியும்.

சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீனம் முதலிய பண்டை மொழிகள் பல இறந்து பட்டதன் காரணம் அவை பிற இனவாழ்வுகளின் அழிவுகளின்மீது கட்டப்பட்ட புதுக்கலவை மொழிகளாய் இயங்கின என்பதே. அவற்றைச் சார்ந்து, அவற்றின் வழி சார்ந்து வாழ்ந்தே பாளி, பாகதம் போன்ற இடைக்கால, முற்கால மொழிகளும் இறந்துபட நேர்ந்தன. மேலைநாட்டினர் இவற்றை உணராத காலத்திலேயே-தற்காலக் குடியாட்சிப் பண்புகளும் மொழியாராய்வுப் பண்புகளும் வளராத காலத்திலேயே-நாகரிக முதிர்வு பெறுத நாட்களிலேயே தம் தாய்மொழிகளில்மாண்ட மொழிச் சொற்களைப் பெரிதும் கலக்கவிட்டனர். இக் கேடுணர்ந்த தமிழரின் இயற்கை யறிவார்ந்த நாட்டமே தமிழிலக்கியமெங்கும் காணப்படும் தனித்தமிழ்ப் பண்பின் மரபு ஆகும்.

தனித்தமிழாக்கத்தில் இலங்கைத் தமிழகம் பொதுவாகவும், யாழ்ப்பாணம் சிறப்பாகவும் கொண்டுள்ள பங்கு சிறிதன்று. ஆயினும் 'தனித் தமிழின்' ஆற்றலையும் இன்றியமையாமையையும் கண்டுணர்ந்து, அதற்கென ஒரு மறுமலர்ச்சியியக்கம் கண்ட பெருமை தென்னகத் தமிழகத்தில் வண்டமிழ்ச் சோணாட்டின் அறிவுவளஞ் சான்ற பெரியாராகிய மறைத்திரு மறைமலையடிகளார்க்கே உரியது. தமிழுலகில் அப்பெரியார் தனித்தமிழியக்கப் பயிர் வளர்க்கத் தொடங்கிய பின்னரே அகல் உலகிலும் மேலைநாடுகளிலும் தாய் மொழித் தூய்மையியக்கங்களும், அவற்றின் இயலார்ந்த விளைவாக அடிப்படை மொழியியக்கங்களும் தோன்றின என்பது கருத்திலிருத்தத் தக்க செய்தி ஆகும்.

இன்றைய உலகின் அடிப்படை மொழியியக்கம் (Basic Language Movements) மறைமலையடிகளின் தனித்தமிழியக்கம் தந்த கடல்கடந்த பிள்ளைகளேயாகும். ஆனால் தனித் தமிழியக்கத்திலிருந்து இன்னும் உலகம் படிக்கவேண்டும் பாடங்கள் பல உண்டு. உலக மொழியரங்கில் தனித்தமிழ் இயக்கம் ஒன்றே மொழியியல்பையும் மனித இன இயல்பையும் நன்கறிந்தவர் தோற்றுவித்த இயக்கம் ஆகும். ஆசிரியர் மறைமலையடிகள் இவ்வகையில் தமிழுலகுக்கு மட்டும் பெரியார் அல்லர். உலக மொழிகள் அனைத்துக்குமே வழிகாட்டிய தலைசிறந்த உலகப் பெரியார் ஆவர். ஏனெனில் உலகின் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மறைமலையடிகள் தோன்றினாலன்றி, அம்மொழிகள் 'தமிழின்' சாவாக் கன்னித் தாய்மொழியில் மூவா இளமை நெறியில் பொங்குமாவளப் பண்பில் நிலவமுடியாது.

இன்று உலக மொழியாய் இயங்குவது ஆங்கிலம். அதனுடன் போட்டியிடும் புது மொழிகள் பல. ஆனால்இடைக் காலத்திலும் முற்காலத்திலும் இதே நிலையில் இருந்த மொழிகள் உண்டு- இலத்தீனம், கிரேக்கம், அரபு, பாரசிகம், சமஸ்கிருதம், பாளி ஆகியவை இவற்றுட் சில. ஆனால் இவற்றுக்குமுன்னும் இவற்றுடனும் இவை கடந்தும் நிலவும் உயிர்மொழிகள், சீனம்போன்றவை. இச்சாவாப் பண்பை உலகமொழிகள் யாவும் பெறமுடியும்; பெறவேண்டும். அடிகள் காட்டிச் செல்லும் மொழிகளே அந்நிலையில் நிலையான உலக நாகரிகம், கலைகள் வளர்க்க முடியும்.

தமிழ் முத்தமிழாக வாழ்ந்த காலம் 4000 ஆண்டுகட்கு முற்பட்ட காலம் —எகிப்தியரும், சால்டியரும், சுமேரியரும், ஏலமியரும், சிந்துவெளி மக்களும், தழைத்தோங்கிய காலம் ஆகும். இன்று இலங்கைத் தமிழகம் தமிழ்க் கடற்கால் கடந்து தென்னகத் தமிழகத்துடன் கை கோப்பது போல, தென்கிழக்காசியா தமிழகத்தினூடாக எகிப்துடன் கைகோத்துக் கைவளைகுலுக்கிய காலமும் அதுவே. தென்னகமும் தென்னிலங்கையும் அப்பழங்காலத்தில் கண்ட பொங்கு மாவளம் தென்கடல் முத்து வளமும் தென்னிலத் தொழில்வளமும் தென்னிலங்கை மாணிக்க வளமும் மட்டுமல்ல. கிழக்கும் மேற்குமாக அன்றைய இருநில மடந்தையரும் ஈடுபட்ட வாணிகக் கைகலப்பில் உதிர்ந்த மணிபவழங்களும்சேர்ந்தே அன்று தென்னவர் திருவளமாய் இயங்கிற்று. கலைவளமாகப் பொங்கிய முத்தமிழ்ச்சங்க வாழ்வு இதுவே.

தென்னகத்துக்கும் இலங்கைக்கும் சிறப்பாகவும், தென்கிழக்காசியாவுக்குப் பொதுவாகவும் உரிய பல பொதுப்பண்புகள் உண்டு. இவ்வெல்லாப் பகுதிகளிலும் தமிழர் இன்று வாழ்வது முற்றிலும் குடியேற்றப் பண்பு என்று பலர்—பல அறிஞர் கூடக் கருதி வந்துள்ளனர். ஆனால் தொன்றுதொட்டே தென்னகத்திலிருந்து இலங்கைக்கும மலாய் முதலிய பகுதிகளுக்கும் தென்னகத் தமிழர் சென்று குடியேறியது போலவே, இலங்கையிலிருந்தும் மலாய் முதலிய பகுதிகளிலிருந்தும் மக்கள் தென்னகத்தில் வந்து குடியேறியதுண்டு. தென்னகத்தில் ஈழத்திலிருந்து குடியேறியவர்கள் ஈழவர், இல்லத்துப் பிள்ளைமார் என்ற பெயர்களில் இன்றும் தடம் பதிக்கப் பெற்றுள்ளது தவிர, இந்நாட்டு மக்கள் அனைவருமே வாழ்விடத்தினால்மட்டும் வேறுபட்டவர்கள். இனத்தாலும் பண்பாலும் தொன்று தொட்டு ஒரு குடிமக்களேயாவர். கடல் கடந்தும் காலங் கடந்தும் மலையாளம், தமிழகம், ஈழம், காசுமீரம், திபெத், நேப்பாளம், அசாம், வங்கம், பர்மா, மலாயா, சீனு, சப்பான் ஆகிய சிதறிய இனங்களின் பழக்கவழக்கங்கள், கலைமரபுகள், மொழிமரபுகள், சமயவிழாக்கள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அடிப்படை ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவை வாணிகக் கலைத் தொடர்பாலோ குடியேற்றத்தாலோ மட்டும் ஏற்பட்டவையல்ல. இத்தனை நாட்டு மக்களின தொலை முன்னோர்களும் தொடக்கத்தில் ஒரு மொழி பேசியவரின மக்கள் என்பதை இத்தொடர்புகள் வலியுறுத்துவன ஆகும்.

(தொடரும்)

ஆசிரியர் சுற்றுப்பயணத்திலிருப்பதால் "ஐயம் அகற்று" அடுத்த இதழில் வரும்.

★

அடுத்த இதழில்.

"கன்னிக் குமரியில் கழக வளர்ச்சி"

"காதலன் கொலை"

சுவையான கட்டுரைகள்.

முல்லை விற்பனையாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

"முல்லை" ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் தேதியன்றே எங்கும் கிடைக்கும். பழைய விற்பனையாளர்கள் முன் பாக்கியையும் தற்போது தேவையுள்ள "முல்லை" இதழுக்குரிய முன் பணம் பிரதி ஒன்றுக்கு 75 புதிய காசு வீதமும் அனுப்பி வைத்துத் தொடர்பை நீடித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

புதிய விற்பனையாளர்கள் முல்லை இதழ் ஒன்றுக்கு 75 புதிய காசு வீதம் முன் பணம் அனுப்ப வேண்டும்.

-பொறுப்பாளர்

மாநாட்டில்



ஆண்களும் பெண்களும் முன்னணிவீரர்களும் கூடியிருக்க, கோ. செங்குட்டுவன் வரவேற்கிறார்.



—1-ம் பக்கத் தொடர்ச்சி—

சென்னைமாநகரத்திற்கு இவ்வளவு பெருமைகள் தோன்றியதற்கேஅடிப் படை, திராவிட முன்னேற்றக்கழகத் தின் எழுச்சிதான்! தேர்ந்தமறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தெழுந்தனரே - அதனுல்தான் சென்னைக்கு இத்துணைப் பெருமை!'' என்ற புதிய வரலாற்றைத் தீட்டிக் காட்டி மக்களைத் திரட்டியிருக்கின்ற னர். இந்தப் பெருமைதான் இன்று சென்னைமாநகரை உலகிற்குக் காட்டுகிறது. இந்தக் காட்சியைத் தான் அன்மையில் நடந்து முடிந்த இம்மாநாடு காட்டுகிறது!



இருநாளும் மாநாடு ''எழிலு-னும் பொலிவுடனும், வலிவுடனும் வனப் புடனும்'' நடந்தேறியது. தலைமை ஏற்ற தோழர் தி. கோ. சீனிவாசன் அவர்கள், காலத்தோடு போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்துவரும் கழகத்தின் பெருமைக்கான வழி வகைகளை விரித்துரைத்தார்கள். களம் காணவேண்டிய அவசியத்தை யும், விரைவையும் தொகுத்துக் கூறி அறைகூவினுர், திறந்து வைத்த தோழ இராம. அரங்கண்ணல் அவர் கள். இரு நாட்களும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் தீப்பொறிகளை யும்-தேன் மழையையும் த(ம்) சொற் களின்மூலம் கொட்டினர். சிதம்பரம் செயராமன், நாகூர் அனீபா முதலி யோர் இசைவிருந்தும், ''உதய சூரியன்'', ''பரப்பிரம்மம்'' முதலிய நாடகங்களும் அரிய கலை விருந்து களாய் அமைந்தன.

புரட்சி நடிகர் நீண்ட நாட்களுக் குப்பின் மேடையில் தோன்றி, பேசி, நம்மை மகிழ்வித்தார்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, அறிஞர் அண்ணு அவர்கள் மறைந்த மறவர்கட்கு நன்றி செலுத்திப் பேசிய காட்சி நெஞ்சை விட்டகலாதது; நினைவை விட்டு நீங்காதது!

பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. என். அவர்களும் தந்த செய்திகள் சிந்தை கவர்வன. இந்த வழியில் தவறாது-கட்டுப்பாட்டு டன் நாம் ஒழுகினோமானுல், வெற்றி நமதே! நமதே!

மாநாட்டுத் தலைவர் அவர்களும் பொதுச் செயலாளர் அவர்களும் குறிப்பிட்டதுபோல் கழகத்தை வளர்ப்பது கட்டுப்பாடு ஒன்றுதான்! நாம் கட்டுப்பாடுடன் வாழ்ந்து, வளர்ந்து திராவிடத்தை அமைப் போம்! திராவிடத்தை அமைப் போம்!

-மா. பாண்டியன்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு